உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி 7 | துன்மதிஞு புரட்டாசிமீ கஉ<br>1921ஞு செப்டம்பர்மீ 16உ | பகுதி 3 |
|---|---|---|


## கடவுள் வணக்கம்.

போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற் கிருக்கு மதுபோல்
புருஷர்பெறு தர்மாதி வேதமுட னாகமம்
புகலுமதி னலாம் பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சியனு மானமுத
னுவி தங்க டேர்ந்து
நானு னெனக்குழறு படைபுடை பெயர்ந்திடவு
நான்குசா தனமு மோர்ந்திட்
டானநெறி யாஞ்சரிகை யாதிசோ பானமுற்
றணுபக்ஷ சம்பு பக்ஷம்
ஆமிரு விகற்பமு மாயாதி சேவையு
மறிந்திரண் டொன்றென் னுமோர்
மானத விகற்பமற வென்றுநிற் பதுநமது
மரபென்ற பரம குருவே
மந்தாகுரு வேயோக தந்தாகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

நாற்றச் சடலத்தை யொன்பது வாச னடைமனையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத் தொடக்கறையை
யாற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை யடர்கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்குமுண் டோகதி சேர்வதுவே.

பொய்யா ருலக நிலையல்ல கானற் புனலெனவே
மெய்யா வறிந்தென்ன வென்ன லிதனை விடப்படுமோ
கையான் மௌனந் தெரிந்தே கல்லாநிழற் கண்ணிருந்த
வைய்யா வப்பாவென் னரசேமுக் கண்ணுடை யாரமுதே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ புரட்டாசிமீ கஉ

## நம் மாதர்க்கு உயர்தரக் கல்வி அவசியமோ?

ஈண்டு மாதர்க்கு உயர்தரக் கல்வியென்பது, ஆண்மக்கள் கற்பதுபோல் ஆங்கில பாஷையில் உயர்தரக் கலாசாலைகளில் (ஹைஸ்கூல் - கல்லூரிகளில்) கற்பிக்கப்படும் பாடங்களைப்படித்து பரீட்சைகளில் தேறுவதாகும். இத்தகைய கல்வி நமது மாதர்ச்கு அவசியமா? அதனால் நன்மை யுண்டாகுமா? என்பதே நாமறியவேண்டிய விஷயம்.

கடந்த ஆவணிமாதச் சஞ்சிகையில் 74-ம் பக்கத்தில் 8-வது பத்தியில் சீடன் என்பவர் கூறியதுபோல், நமது நாட்டில் பெண் கல்வி நலமளிக்கு மென்பதும், தீமையளிக்கும் என்பதும் ஆகிய இருகட்சியுண்டு. இரண்டாவது கட்சியிலும் கல்விமான்களும் அறிவுடையோரு முண்டு. இரண்டிற்கும் காரணங்களு முண்டு. இப்போது நமது நாட்டில் பெண் கல்வியைப்பற்றி மிக்க கிளர்ச்சியுண்டா யிருக்கிறது. சிலர் மேல்நாட்டாரைப் போல் நமது மாதரும் உயர்தரக் கல்வி கற்றால் நம் நாடு முன்னேற்ற மடைந்து விடும் என்று கருதுகிறார்கள். இவர்கள் மாதரின் உயர்தரக் கல்வியால் தான் மேல் நாடுகள் முன்னேற்ற மடைந்தன வென்று தவறான அபிப்பிராயங்கொண் டிருக்கிறார்கள். ஆகையால் நமது மாதரும் உயர்தரக்கல்வி பெறவேண்டும் என்றும், அது பெருங்கௌரவ மென்றும் பலர் கருதுகிறார்கள், "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்—எண்ணுவ மென்ப திழுக்கு" ஆதலின் இவ்வுயர்தரக் கல்வி நமது பெண்மணிகளுக்கு அவசியமா என்று ஆராயவேண்டியது நம் கடமையாகும்.

1-வது. நமது ஆண்மக்கள் உயர்தரக் கல்வியால் அடைந்த நன்மையும் தீமையும் எவ்வளவென்று கவனிப்போம்.

இவர்கள் சீவனத்திற்காக இராஜபாஷையைக் கற்கவேண்டி நேர்ந்தது. இன்னும் பூகோளம், தேசசரித்திரம், கணிதம், இரசாயனம் முதலிய பல சாத்திரங்களையும், சட்டங்களையும் அப்பாஷையிலேயே கற்கிறார்கள். ஆனால் எவ்வளவு கற்றாலும், இவையாவும் இவர்கள் சீவனாதாரமாகமட்டுமே யுபயோகமாகின்றன வன்றி வேறில்லை. துரைத்தன முறைமைகளை யுணர்ந்ததும், பொதுவாய் அறிவைத் தீக்ஷணியமாக்கிக் கொண்டதும் நன்மையே யாகும். ஆயினும் அக்கல்வியால் இவர்களுக்குண்டாகிய தீமை இந்த நன்மையாலுண்டாகவேண்டிய பயனையடையாவண்ணம் தடுத்துவிடுகிறது.

தீமைகள் எவையெனின்:—

இவர்கள் வாசிக்கும் நூல்களனைத்தும் தங்கள் சுயநலம் விர்த்தியடையும் நோக்கத்தோடு அன்னிய ஜாதிமதத்தைச் சேர்ந்த அன்னிய நாட்டாரால் நமது நாட்டார்க்கென்று எழுதப்பட்டவையாதலின், இவர்கள்,

(1) தங்கள் தாய்ப்பாஷையை யலட்சியமாகக் கருத ஆரம்பித்து விடுகிறார்கள்.

(2) தாய்ப்பாஷைக்கல்வியில்லாததால், நமது மதாசார ஒழுக்கங்கள், நம் முன்னோரின் பெருமை, நம் நாடு பூர்வீகமுதல் நாகரீகம், செல்வம், ஞானம் யாவற்றிலும் முதன்மை பெற்றிருந்தது என்பனவாகிய உண்மைகளை யுணராதவர்களாய், இவற்றையெல்லாம் அலட்சியம் செய்யத் தொடங்குகிறார்கள்.

(3) நம்முன்னோர் நாகரீகமில்லா மூடர்களாக விருந்ததாகவும், நம்நாடு இப்போதுதான் நாகரீகமும் செல்வமும் அடைந்து வருவதாகவும் கருதுகிறார்கள். (உண்மையோ அநாகரீகமும், அநாசாரமும், வறுமையுமாக விருக்கின்றன)

(4) கௌரவமல்லாததைக் கௌரவமாகவும், நாகரீகக்கேட்டை நாகரீகமாகவும் கருதி, நமக்கு அனுவசியமும் தீமையிழைக்கத்தக்கனவுமாகிய அன்னிய ஆசாரங்களைப் பின்பற்றத் தொடங்கிவிடுகிறார்கள்.

(5) அன்னிய மதாசாரங்களைப் பற்றிய நூல்களை வாசிப்பதாலும், சுயமத ஆராய்ச்சி யின்மையாலும் எம்மதப்பற்று மின்றி நாஸ்திகத்திற்கு அடுத்தபடியில் சேர்கிறார்கள். பிற்காலத்தில்

அதாவது பாடசாலையை விட்டு உலகவாழ்க்கையில் பிரவேசித்த தும், எவ்வழியிலேனும் பொருளீட்டலும் உலகபோகங்களை யனுப விப்பதுமே தாங்கள் எடுத்தஜன்மத்தில் செய்யவேண்டிய கடமை கள் என்று கருதுகிறார்கள்.

(6) தந்தி, நீராவியந்திரம், புகைவண்டி, புகைக்கப்பல், மோ டார்வண்டி, ஆகாயவிமானம் இத்தகையவைகளெல்லாம் முதல்தர நாகரீக போகங்கள் என்ற ஒருபக்கத்தை மட்டும் காண்கிறார்களே யன்றி, இவற்றால் நாம் பெறும் அனுகூலங்கள் எவ்வளவு, இவற் றால் யார்செல்வமும் சுகமும் பெறுகிறார்கள், யார் வறுமையும் துன்பமு மடைகிறார்கள் என்பனவாதிய மற்றொரு பக்கத்தைக் காண முயல்வதேயில்லை. அந்தோ! நவீன நாகரீக மயக்கம் என்ற திரை அப் பக்கத்தைக் காணவொட்டாதபடி இவர்கள் அறிவாகிய கண்ணை மறைத்து விடுகிறது.

இவர்கள் மேல் நாட்டாரிட மிருந்து அறியவேண்டிய விஷ யங்களை நமது தாய்பாஷையிலேயே கற்றும், நமது தாய்ப்பாஷை யில் நம் மதம் ஆசாரம் முதலியவைகள் இவர்களுக்குக் கற்பிக்கப் பட்டும் இருந்தால் இத்தீங்குகள் நேரா.

இவர்கள் ஆண்மக்களாதலால் பொருள் தேடுவதற்காக இத்த கைய கல்வி கற்கவேண்டியது அவசியமாயிற்று. இனி நமது மாது சிரோமணிகளுக்கு உயர்தரக் கல்வியாலும் அன்னியபாஷா ஞான த்தாலும் ஆகவேண்டிய காரிய மேதேனு முண்டோ வென்று பார்ப்போம்.

மேல்நாட்டு மாதர் அத்தகைய கல்விகற்கிறார்கள் என்பதை நமது மாதரும் பின்பற்றத்தக்க ஒரு திருட்டாந்தமாகச் சிலர் கருது கின்றனர். மேல் நாட்டு மாதரின் இலௌகிக ஆசாரம் குடும்பவாழ் க்கை முதலியவைகளுக்கும் நம் நாட்டுமாதர் ஆசாரம், வாழ்க்கை முதலியவற்றிற்கும், நேர்மாறான வித்தியாச முண்டு. மேல்நாட்டு மாதரில் அனேகர் மணம்புரியாமலே வாழ்நாட்களைக் கழிக்கின் றனர். அத்தகையோர் ஆண் பிள்ளைகளைப்போல் பலவிதத்தொழில் களைச் செய்கின்றனர். கல்வியிலாகா, தபால் இலாகா, தந்தியிலாகா, வர்த்தகசாலை, தொழிற்சாலைகள் முதலியவற்றில் பலவிதத் தொ ழில்கள் செய்து ஜீவிக்கிறார்கள். ஒரு ஸ்திரீ கலியாணம் செய்து கொள்ளாம லிருப்பதாவது, பல ஆடவர்களோடு கலந்து பேசுதல்,

ஆடவர் கூட்டத்தி லிருந்து தொழில் செய்தல், ஆடவர்கள் போலவே வெளியில் எங்கு வேண்டுமாயினும் செல்லல், ஆடவர் நிறைந்த சபையில் தங்கி இருத்தல் பேசுதல் முதலிய இத்தகைய நடக்கைகளாவது அவர்கள் ஆசாரப்படி கௌரவத் தாழ்வான அல்லது ஒழுங்கீனமான நடக்கைகளாகக் கருதப்படுவதில்லை.

இன்னும் புருடனும் மனைவியுமாகக் கூடிவாழும் இல்வாழ்க்கையில் அவர்கள் ஆசாரத்திற்கும் நமது ஆசாரத்திற்கும் மிக்க பேதமுண்டு. ஸ்திரீகளை அவர்கள் பிரியப்படி ஏறக்குறைய எல்லா விஷயங்களிலுமே நடக்க விடுவதுதான், ஸ்திரீகளை அன்பாகவும் மரியாதையாகவும், கௌரவமாகவும் நடத்துவதாகும் என்பது அவர்கள் அபிப்பிராயம். ஒருவன் வெளியிலிருந்து தன் வீட்டிற்கு வந்தபோது, தன் மனைவி அவளுடைய சினேகிதனுகிய ஒரு அன்னிய வாலிபனோடு அறையில் பேசிக்கொண் டிருப்பதாக வேலைக்காரி கூறினல், புருடன் அவள் அனுமதிபெருமல் அந்த அறைக்குள் செல்லலாகாது. மனைவிக்கு ஒரு கடிதம் யாரிடமிருந்து வந்திருந்தாலும், கணவன் அதைப்பிரித்துப் பார்க்கலாகாது. அப்படியே அவள் எழுதும் கடிதத்தையும் கணவன் பார்க்கலாகாது. அவர்கள் ஆசாரவிதிகள் இவ்வாறிருப்பினும் அந்த நாடுகளிலும் மனைவியை அலட்சியம் செய்வோரும், வைது, அடித்துக் கொடுமையாக நடத்துவோரும் அனேகருளர். அதோடு ஒரு புருடனைவிட்டு விலகி வேறொருவனை மணந்து கொள்ளலாமென்ற வழக்கத்தால் புருடன் மனைவிக்குள் வெறுப்பும், சச்சரவும், பிரிவினையும் சீக்கிரத்தில் உண்டாக அனுகூலம் ஏற்படுகிறது.

இப்போது மேற்குக்கும் கிழக்குக்குமுள்ள ஆசாரங்களின் பேதம் எத்தகையதென இதை வாசிப்போர்க்கு நன்கு விளங்கலாகும். நமது நாட்டு ஆசாரப்படி மாதர் எப்போதும் புருடர்களாலேயே ஆதரிக்கப் படவேண்டும். புருடர்களே வெளியில் சென்று உழைத்துப் பொருள் சம்பாதித்துக் கொண்டுவந்து மாதர்களிடம் கொடுக்க வேண்டும். புருடரே கடைவீதிக்குச் சென்று குடும்ப வாழ்க்கைக்கு அவசியமான சகல பொருள்களையும் வாங்கிவந்து வீட்டில் சேர்க்க வேண்டியவர்கள். மாதர் வீட்டிலிருந்து குடும்ப விவகாரங்களைக் கவனித்து, புருடன் வருமானத்திற்குத் தக்கபடி சிக்கனமாகப் பண்டங்களைச் செலவழித்து, புருடன், மக்கள் இன்னும்

குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் ஆகாரமளித்து, இல்லற தருமத்தைப் பாதுகாக்கவேண்டும். நமது நாட்டு மாதரில் ஆதரிப்பாரின்றிக் கஷ்ட நிலையிலிருப்போரும் வீட்டிலேயே ஏதேனும் கைத்தொழில் செய்தல், தின்பண்டங்கள் செய்து விற்றல் முதலிய வழிகளில் சீவனம் செய்வார்களே யன்றி ஆடவரைப்போல் வெளியில் சென்று தொழில் செய்யார்கள். ஒரு பெண் கலியாணமின்றி இருந்து விடுவது நமது நாட்டில் மிக்க அகௌரவமாகவே கருதப்படுகிறது. புருடனிடமிருந்து வாழாமல் சச்சரவுபட்டுத் தாய்வீட்டிலேயே வந்திருக்கும் பெண் வாழாவெட்டி யென்று இழிவாய்க் கூறப்படுவாள். பூர்வீகமுதலே நம்மாதர்கள் இவ்வாறு தங்கள் சீவனத்திற்காகத் தாங்களே உழைப்பதின்றிப் பெற்றோர், கணவன் அல்லது கணவன் சகோதரர் அல்லது தம் சகோதரர் முதலிய ஆடவராலேயே ஆதரிக்கப்பட்டு வருவது பிரசித்தம்.

ஆகையால் சீவனத்திற்காகவேண்டி உயர்தரக் கல்வி நமது பெண்மணிகளுக்கு அவசியமன்றாகும். மற்ற விஷயங்களில் ஆடவர்க்கே பல தீமைகளை விளைவிக்கும் அக்கல்வி பெண் மக்களுக்கு இன்னும் கொடிய தீங்கைவிளைவிக்கு மென்பதில் சற்றும் ஐயமின்றாம். பழக்கத்தால் இயற்கைக்குணங்களும் மாறி விடலாகும். சுபாவமாக மாமிசம் புசியாத குரங்கு கிளி முதலியவைகூட பழக்கத்தால் அதைப் புசிக்கின்றன. நமது மாதர்க்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்ற குணங்கள் அவசியமானவை. இவை ஸ்திரீகளுக்கே இயற்கையா யமையத்தக்க குணங்களாகும்.

இக்குணங்களுக்கு இடையூறு நேரா திருப்பதற்கே நமது பெண்கள் புத்தியறிந்தது முதல் வீட்டைவிட்டு வெளிச்செல்லலாகா தென்றும், அன்னிய ஆடவர் எதிரில் செல்லக்கூடா தென்றும், வீட்டிலும் அடக்க ஒடுக்கத்தோடு ஒழுகவேண்டு மென்றும் நம்முன்னோர் தக்கவிதிகளை யேற்படுத்தி யுள்ளார்கள். நம்முன்னோர் ஏற்பாடுக ளனைத்தும் நம்மாதர் இம்மையிற் சுகமும் புகழும் மறுமையில் உயர்பதவியு மடையவேண்டு மென்ற கருத்தோடு செய்யப்பட்டவை. இவற்றால் நம்மாதரில் பலர் இறந்தபின்னும் பத்தினித் தேவதைகளாய்ப் பூசிக்கப்படும் புண்ணியப் பேறடைகிறார்கள் என்பது அனுபவமா யாவருமறிந்ததே. துரோபதை, கண்ணகி, அருந்ததிபோன்ற பலரை இதற்குத் திருட்டாந்தமாகக்கூறலாம். யாவர்க்கும் இவ்வுலகில் அழியும் பலவித (அற்ப

மான மிருக இச்சையைப் பூர்த்திசெய்யும்) போகங்களைவிட அழியாப் புகழே சிறந்ததாகும். அத்தகைய புகழையும், மறுமைப் பயனையுமே நம்மாதர் பெறவேண்டு மென்ற நோக்கங்கொண்டு நம் முன்னோர் தக்க இலௌகிக மதாசாரங்களை ஏற்பாடு செய்தார்கள். நம்முன்னோர்களைப்போல் மற்ற எந்தநாட்டாரும் தம்மாதர்களின் விஷயத்தில் அவ்வளவு அக்கரை யெடுத்துக் கொள்ளவேயில்லை.

உயர்தரக் கல்வியாலும், நமது பெண்கள் புத்தியறிந்த பின்னும் பாடசாலைக்குச் செல்லுதல், தாராளமாக ஆடவரைப்போல் எங்கும் நடமாடுதல், அந்நிய ஆடவர்களிடம் கூச்சம்விட்டுச் சம்பாஷித்தல் இத்தகைய நடக்கைகளாலும் அவர்களின் ஸ்த்ரீ இயல்பு மாறி ஆடவர் இயல்பு உண்டாகும். இதனால் அச்சம் மடம் நாணம் முதலிய குணங்கள் போய்விடும். கற்பென்னும் பயிருக்குக் காவல் வேலிபோன்ற அக்குணங்கள் குன்றினால் கற்பு எங்ஙனம் நிலைத்து நிற்கும்? கடவுள் இயற்கையிலேயே ஆடவன், ஸ்திரீ இவர்களின் சுபாவங்களில் ஒன்றுக் கொன்று நேர்மாறான பல வித்தியாசங்களை யமைத்திருக்கிறார். அவ்வாறிருக்க ஸ்திரீயின் சுபாவகுணங்களில் சில புருடசுபாவமாக மாறும்பட்சத்தில் இல்லறம் நம்முன்னோர் விதித்த அறநெறியில் ஒருபோதும் நடைபெறுதென்பது திண்ணம். அப்போது ஸ்திரீயும், புருடனும் கூடிவாழும் வாழ்க்கை கேவலம் மிருக சுபாவமான இவ்வுலக போகங்களை யனுபவிக்கவே பயன்படத் தக்கதாகும்.

அந்தோ! இத்தகைய மாறுதலால் தெய்வீகம் பொருந்தியதும், ஞானத்திற்குத் தாயகமானதுமாகிய நம் தாய்நாடு எத்தகைய கேடெய்து மென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நம் நாட்டிற்குப் பெருந் தீங்கை விளைவிக்கத்தக்க இக்கெடுதி உடனுக்குடன் உண்டாகாததாலேயே இதை அசட்டை செய்து விடாதீர்கள். ஓர் ஏரிக்கரையில் எலி வளைபோன்ற ஒரு சிறு துவாரத்தை யுண்டாக்கிவிட்டால், அச்சமயம் ஒரு ஆபத்தும் தோன்றுவிட்டாலும், நம் கண்களுக்குப் புலப்படாமலே அத்துவாரத்தின் வழியாக நீர் செல்வதால் துவாரம் கொஞ்சங் கொஞ்சமாகப் பெரிதாகிக் கொஞ்ச காலத்திற்குள் திடீலென்று கரை யுடைந்து வெள்ளம் ஊரை யழிக்கச் செய்யும். அதுபோலவே இக்கெடுதியால் இப்போதே ஒரு

தீமையும் விளையாவிடினும், கொஞ்ச காலத்தில் இதனால் நம் தாய் நாடு மிக்க துக்ககரமான நிலைமையை யடையுமென்று நாம் உணர வேண்டும். நமது பெண்மக்களுக்கு நமது தாய்ப்பாஷையில் அவர்களது இல்லறநெறிக்கு அவசியமான கல்வியைமட்டும் போதிப்பதே நன்மை பயக்கும். ஆன்மார்த்த நூல்களை யெவ்வளவு அதிகமாகக் கற்பினும் கெடுதியில்லை. சச்சிதானந்தப் பரம்பொருள் நாம் வீண் மயக்கில் சிக்கித் தகாத வழிகளில் சென்று இடருரு வண்ணம் நல்லறி வளித்துப் பாதுகாக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத் ஸத்.

---

## தமிழர் புராதனம்

(57-ம் பக்கத்தொடர்ச்சி)

இனிக் கன்னட பாஷை, கன்னரமென்றும், கன்னட மென்றும், கன்னடிய மென்றும், கர்நாடகமென்றும் வழங்கப்படும். அப்பாஷை மைசூரென்னும் எருமைநாட்டிலும், தென் மஹாராட்டிரப் பிரதேயத்திலும் அதனை யடுத்த நிஜாம் இராச்சியம் ஜில்லாக்களிலும் பயிலுகின்றது. இம்மொழியைக் கர்நாடகமென்பதே பொருத்தமானது.[தமிழ்-கருநாடு; கருப்பு மண்நாடு.] இப்பதப் பிரயோகம் வடமொழிப் பிரிஹத் ஸம்ஹிதையிற் காணப்படும் என்ப.

இக்கன்னட பாஷை தமிழுந் தெலுங்குங் கலந்ததோர் நடை. அஃதும் ஹள (பழைய) கன்னடமெனவும், ஹொச (புதிய) கன்னட மெனவும் இரு பாலாகி இயலும். தமிழ்மொழி கன்னடமாகத் திரியும்போது 'ப' காரங்களனைத்தும் 'ஹ' காரமாகத்திரிந்து பெரும்பாலும் 'உ' கர்க் சாரியை பெற்று வழங்கும்:—

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| பால் | ஹாலு |
| பல் | ஹல்லு |
| பத்து | ஹத்து |
| பொன் | ஹொன்னு |
| பள்ளி | ஹள்ளி |

இப் பாஷைகளனைத்தும் தமிழினின்றே யாவது, தமிழ் சம்பந்தப்பட்ட பாஷைகளி னின்றுவது பிரிந்தனவென்பது தெற்றென விளங்கும். அதனானே மனோன்மணீய முடையாரும்.

" கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன் உதரத் துதித்தெழுந்தே............." என்றார்.

இனி, இத்திராவிட மொழிகளுட் சிறந்த தமிழ்மொழி வடமொழிக்கு எவ்வாற்ருனுந் தாழ்ந்த தன்று. சிவஞான முனிவர் காலத்தும் அவர்க்கு முன்பும் இந்தக் கொள்கையே பரவி, தமிழ்ப் புலவர்களும் சார்ந்திருந்தனர். அதனுல் அவர்க்குத் தமிழ்பால் உண்டாம் ஊக்கம் குறையும் என்பது திண்ணம். அத்தகைய எண்ணத்துடன் இயற்றும் நூல்களும் அக்கொள்கைக்கே யீடுபட்டு நடக்கும். இலக்கணங் கூறவந்த ஈசானதேசிகரும் அதன் பாற்பட்டு,

“அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்றுள்
ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ” என்று

தனித்தமிழின் சிறப்புணராது வடமொழியே யுயர்வெனக் கொண்டார்.

அதனுல் சிவ ஞானமுனிவர் முதலாயினுர் தமிழ் எவ்வகையானும் சமஸ்கிருதத்துக்குத் தாழ்ந்ததன்று என முறையிடலானுர்.

“இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇயினு ரென்ருலிவ்
இருமொழியு நிகரென்னும் இதற்கைய முளதேயோ” என்றும்

“வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்தக்
குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்திடுவார்.” என்றும்

சிவஞானமுனிவர் மேற்கூறியதற்கு மாற்ருக வடமொழிக்குத் தமிழ் இணையேயாம் எனப் பௌராணிகமாக நிரூபித்தார். வடமொழியின் சிறப்பு நோக்கி அதற் கிணையாகத் தமிழும் சிறப்புற்றதே என்பது அவர் கூற்று. சங்கநூலின் இயல்பு விதந்து தெளிப்பின் அவர்கூற்றும் தமிழின் சிறப்பை நன்கோதவில்லை எனத்தோற்றும்.

வேறுவேறு காலங்களில் வேறுவேறு இடங்களில் முத்தமிழ்ச் சங்கங்கள் வீற்றிருந்து தமிழ்மொழியின் வரையறுத்துப் பலபுலவர் அருளியநூற்களுள் கணக்கேற்பட்டன. நீங்க ஏனையநூல்கள் எங்குச் சென்றன. முத்தொள்ளாயிரம், என்னு மரும்பெரும் நூல் எங்கேனும் முழுவதூஉம் அகப்படுமோ? ‘தகடூர் யாத்திரை’ என்னு முதற் சங்கத்துநூல் ஒன்றிரண்டு பாட்டுக்கள்போக பிற அறிவாமோ ? செயிற்றிய முதலிய ஏனையநூற்களின் பெயர் மாத்திரமன்றி அவற்றின் இயல்பு இத்துணை யென்றுணர்வேமோ ? இவைகளே தமிழணங்குக் கணியாயமைந்தவை.

இனிக் கிடைத்துள்ள கீழ்க்கணக்கும் நெடுங்கணக்கும் தொகை நூற்களும் ஏனைய (பண்டைய) இலக்கண இலக்கியக் காப்பியங்களும் வரையறுத்துக் கூறினும் பாஷையின் சிறப்பு ஒருவாறு கூறியவாரும்.

எனினுந் தமிழ் தெலுங்குக்கும் தாழ்ந்த தென்றே கருதப்படுகின்றது; வடமொழி யுண்டான காலத்திலேயோ, ஆந்திரம்போல தனிநின்றே தமிழ் உண்டாயதென்ற கொள்கையே பரவா நின்றது. இதற்குக் காரணம் தமிழிலும் அதைவிடத் தெலுங்கினும் வடமொழிப்பதங்கள் அமிதமாகக் காணப்படுவதே. இப்பதங்கள் தற்சமமாகவும் பெரும்பாலும் தற்பவமாகவும் பிரயோகிக்கப் பட்டுள்ளன. இதனானே அம்மொழிகள் வடமொழியினின்றும் உற்பவித்தன என்பது பெருமிதமாகும். [தமிழுக்குந் தெலுங்குக்குமுள்ள வொற்றுமையும், அநேகமாகத் தமிழினின்றே ஆந்திரம் பிரிந்திருக்கலாம் என்றற்கு ஏதுவும் மேலேகாட்டினும்] தமிழில் மிகுதியான சொற்களும் தொடர்களும் இலக்கண விசேடமும் சமஸ்கிருதத்துக்கு மாறுபட்டுப் பொதிந்து கிடக்கின்றன. இவையிற்றில் நம்பாஷையின் சிறப்பும் பொலிவும் மலருமன்றி ஏனைய தற்சம தற்பவ பதங்களிலன்று என்பது நன்கு கவனிக்கற்பாலது. இச்சொற்களே தமிழ் நாட்டில் செந்தமிழ்ப்பதமெனக் கொண்டாடப்படும்.

தமிழிலு மின்னுஞ் சில மொழிகளிலும் வடமொழிச் சொற்கள் அவசியத்தை முன்னிட்டு (அப்பொருளில் வேறு சுதேசப்பதங்களின்மையால்) பிரயோகிக்கப் படவில்லை. அழகையும், அர்த்த விசேஷத்தையும் சிங்காரத்தையும் உன்னியும், தர்க்க மத ஜோதிஷ சம்பந்தமான விசேஷார்த்தத்தை நோக்கியும் உரையாடுகின்றன. இன்னுந் தமிழில் வடமொழிச் சொற்களற்றுப் பயிலின் அந்நடை மிகவும் இனிப்பாகவும் ஊற்றெழுஞ் செம்பாகமாகவும் கிடக்கும். அச்சொற்களை யொழிப்பின் தமிழ் நடையே யினிது செல்லுமென்பது சிலர் கொள்கை. *

"ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறக்கினும் யாழ்க்கவைதா னென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக னினக்கு மாங் கனையளே"

[கலித்தொகை.]

நோயுங் கைமிகப் பெரிதே மெய்யுந்
தீயுமிழ் தெறலின் வெய்தா கின்றே
பொய் யெனச் சிறிதாங் குயிரிய பையென
முன்னிற் கொளினோ் நந்துவள் பெரிதென
நிரையே நெஞ்சத் தன்னைக் குய்த்தாண்
டுரையினி வாழி தோழி புரையி
னுண்ணே செல்வனை ஞெகிழ்த்தோன் குன்றத்
தண்ண னெடுவரை யாடித் தண்ணென

*"Tamil, however, the most highly cultivated *at intra* of all Dravidian idioms, can dispense with its sanskrit altogether, and not only stand alone, but flowrish without its aid"— Caldwell.

வியலறை மூழ்கிய வளியென்
பசலை யாகந் தீண்டிய சிறிதே" [அகநானூறு.]

இவற்றில் ஒரு பதமேனும் வேருகக் காணுதலரிது. இவைபோல் பல பாக்கள் மலிந்துள்ளன. திருக்குறளில் சராசரியாகப் பார்க்கின் ஓரதிகாரத்தில் ஒன்றுக்குமேல் வடமொழிப் பதம் கிடைத்தலரிது. நாலடியுள் ஐந்து பாவுக்கொன்று காண்பதரிது. கலிப்பாட்டின் ஒவ்வொன்றில் ஒன்றின் மிக்கிலது. பத்துப்பாட்டு பலவடிகளானுயினும் ஒவ்வொன்றினும் நான்குக்குமேல் அகப்பட்டிலது. இவைகளும் தற்பவமாகப் புலப்படாவகை திரிந்து கிடக்கின்றன.

அதனுல், வடமொழியினின்றே தமிழ் நூற்கள் அனைத்தும் மொழி பெயர்க்கப்பட்டன வென்னுங் கூற்று சற்றேனும் ஒவ்வாது. குறளுஞ் சிந்தாமணியு மின்னுஞ் சில நூற்களும் வடமொழி நூற்களினும் மிக்கதே; அவை தமிழுக்கே யுரியவை. கம்பராமாயணமும், பாரதமும், வடமொழியின் வழிநூல்களாயினும், அவை முதனூல்களினும் மிகுந்த சந்தர்ப்பங்களில் மேம்பட்டதே. வான்மீகிராமாயணம் இல்லாவிடின் கம்பரிடமே யவர் கவிதை பெற்றனர் என்னலாம்.

இன்னும் இவ்விரு பாஷைகளின் இலக்கணங்களை யாய்ந்து பார்க்கினும் மேற்கூற்று வலியுறும்.

இனித் தமிழுக்கே யுரிய பதங்கள் வடமொழிமிற் பல ஏறியுள்ளன. 'நீரும்' 'மீனமும்' வடமொழிப் பழைய நிகண்டுகளிற் புலப்படவில்லை யென்ப. ஆதலால் அதற்கு முன்பே அச்சொற்கள் தமிழ்நாட்டில் வழங்கியிருந்ததால் தமிழ்ச்சொற்களே வடதிசை சென்றதென் றுணரலாம். அக்க. அடவி* ஆணி, குடி, கடுகு, வலை முதலியனவும் தமிழாய் வடமொழியேறின வென்பர். கால்ட் வேல் அவர்கள், உச்சிமேற் புலவர்கொள் நச்சினூர்க் கினியரும் காலம், உலகம் என்பன வடசொல் அன்றென்றலின் அவைதமிழ்ப் பதங்களேயாம். என்றும் ஸ்ரீமான் தாமோதரம் பிள்ளை முகம், தாமரை என்பனவும் தமிழ்ச் சொற்களே என்றும் கூறுகின்றனர்.

விசேஷார்த்த நிமித்தம் சமஸ்கிருதத்தினின்றும் தென்மொழி யேறிய பதங்களும், அதற்குமுன் வழங்கின தமிழ்ச்சொற்களும் (சில) அடியில் குறித்துள்ளன:—

| வடமொழி | தமிழ் | வடமொழி | தமிழ் |
|---|---|---|---|
| பித்ரு | அப்பன் | மகிஷம் | எருமை |
| மாத்ரு | ஆய், தாய் | கபி | குரங்கு |
| அக்ஷி | கண் | சர்ப்பம் | பாம்பு |
| சூரியன் | ஞாயிறு | அக்நி | தீ |
| கிராமம் | ஊர் | கானனம் | அடவி *; காடு |

* அடவி என்பது அடு [அடர் - நெருக்கம்] என்னுந் தமிழ்ப் பகுதியினின்றும் உண்டாயசொல், தெலுங்கிலும் இச்சொல் வழக்குண்டு.

இஞ்சி என்னும் தமிழ்ச்சொல் சமஸ்கிருதத்திலும் கிரேக்க பாஷையிலும், ஏனைய ஆங்கில பாஷைகளினும் பரவி யுள்ளது.

| தமிழ் | சமஸ்கிருதம் | கிரேக்கு | ஆங்கிலம் |
|---|---|---|---|
| இஞ்சி<br>இஞ்சிவேர் } | ஸ்ரிங்கவேரா | ஜிஞ்சிபெர் | ஜிஞ்சர் |

தமிழ் நாட்டில் சமஸ்கிருதத்தைப் பெரும்பாலும் கிரந்த எழுத்துகளிலேயே எழுதிவருகின்றனர்; தேவநாகர அக்ஷரங்கள் அதிகமாகப் பயிலுவதில்லை. இக்கிரந்தம் மணிப்பிரவாள நடையெனவும் படும். அது தமிழும் சமஸ்கிருதமும் கலந்து நடப்பதோர் பாஷை. பெரும்பாலும் வடமொழி யுச்சரிப்பும் சிறுபான்மை தமிழும் பெற்றுச் சந்தவின்பமும் கர்ணாமிர்தமான இனிப்பும் பெறும். மணி (முத்து) தமிழையும், பிரவாளம் (பவளம்) வடமொழியையும் குறிக்கும். இப்பாஷை யக்ஷரங்கள் தெலுங்கும் தமிழுங் கலந்தெழுதுவதுபோ லிருக்கும்.

வைஷ்ணவ திவ்யப் பிரபந்தங்களின் பாஷியமும் [பாஷியம்—உரை] திராவிட மாபாஷியமும், ஸ்ரீபுராணம் அருங்கலச் செப்புரை முதலியனவும் இன்னும் பலவும் இந்நடையிலேயே* யுள்ளன.

ஆனால் இவ்வண்ணம் இரண்டு மொழிகளுங் கலந்து பயிலுவது அக்காலத்தினர்க்கு வெறுப்பாக இருந்ததாகவே தோற்றுகின்றது. தற்கால 'நாகரிக' முதிர்ச்சியில் ஆங்கிலம் உடன்பயிலுவது எத்துணை வெறுப்பு நம்மவருட் சிலருக்குப் படுகின்றதோ, அத்துணையே அக்காலத்திலும் ஏன் தந் திருத்தலாகாது? வடமொழிக் கலப்பால், தமிழ்நடை தூய்மையடைந்த தென்னலாம். அஃதும் ஒருதலையே. ஆனால் ஆங்கிலக் கலப்பால் நிலை குலைந்துள்ளது. விவரிப்பின் மற்றொன்று விரித்தலின்பாற் படுமென அஞ்சி இத்துடன் நிறுத்தப்பட்டது.

சிற்க இம்மணிப்பிரவாள நடையினின்றே தமிழ் எழுத்துகள் உண்டானதாகக் கூறுகின்றனர். இக்கூற்று பொருந்தாது. ஆரியர் தென்றிசை நோக்கும்போது, தமது நூற்களையுங் கொள்கைகளையும் எளிதில் தென்னாட்டினர்க்கு அறிவுறுத்தும் நிமித்தம் தமிழ் தெலுங்கு எழுத்துகளால் வடமொழி எழுத்துகளை எழுத இயைக்கி அவ்விதம் தமது கோட்பாடுகளைப் பரப்பினர். அப்பாஷை வடமொழி முடிபையே பெற்றிருத்தல் அதற்குச் சான்றாம். இதனாலும் தமிழ் ஆரியர் வருவதற்கு முன்பு பரவியிருந்ததென்பதை வலியுறுத்தும்.

* இன்னுங் கலித்தொகை முதலிய சங்கநூற்களின் உரைகளில் வடமொழிப் பதங்கள் வழங்குமிடத்து இந்நடையிலேயே (ஏட்டுப் பிரதிகளில்) உளதாகப் புலப்படுகின்றது.

" சதுர்மறையா ரியம்வருமுன் சகமுழுது நினதர்யின்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே"

(தொடரும்.)

து. தீனதயாளு.

---

## பெற்ருேர்ப் பேணல்.

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

வியாசம் எழுதுதல் வெகு பிரயாசம். இலக்கண இலக்கியங்களில் மிக்க பயிற்சியும் அனுபவமுமிருத்த லத்தியாவசியம். ஒவ்வொரு மொழியும்-ஏன், எழுத்தும்-பொருத்தமானதே யெனத் தாபிக்கத் தக்க ஆதாரத்தை யுள்ளமைத்த பின்பே எழுதத் துணியவேண்டும். மௌனமா யிருந்தால் ஊமையன், ஊரைச் சுடும். பேசினலோ வாயாடி, அதிகப் பரசங்கி. சுருக்கமா யிருந்தால் குன்றக்கூறல்; சற்று விரியின் மிகைபடக் கூறலென்னுங் குற்றம்; சுருங்கச் சொல்லலாம், அழகில்லை. எளிய நடையில் எழுதினல் கல்வி போதாது; உயர் நடையானல் உலகானுபவ மில்லை; இவைக ளிருந்தாலும் சந்திகள் மாறுபாடு; பொருளாழ மில்லை; அது இல்லை; இது இல்லை முன்னே போனல் கடி; பின்னல் வந்தால் உதை. எல்லாவற்றிற்கும் தப்பி எண்ணிய லக்கை எய்த வேண்டியதாகிறது.

மலைகல்லி எலி பிடிப்பதுபோல, இத்யாதிகளின்படி எழுதத் துணியின் ஒரு வாக்கியம் வரையவும் அச்சமாகவே யிருக்கிறது. கற்ருேரெல்லாம் கவீசுவரர்களா! பேசுவோர் யாவரும் பிரசங்கிகளாகார். வாசிக்கத் தெரிந்து கொண்டிருப்போ ரியாவரும் வாத்தியாராகத் தக்கோரன்று. ஆயினும் என் செய்வது? ஆசை கெட்டது. ஆசை வெட்கமறியாதே.

வியாசம் என்பதற்குச் சிதைந்து கிடப்பவைகளை ஒழுங்காக அமைத்தல் என்று பொருள். எனவே எடுத்துக்கொண்ட விஷயத்திற்கேற்ற நீதிகளைப் பலப்பல நூல்களினின் றெடுத்து இன் சொற்களாலமைத்து வாசிப்போர் மனதில் பசு மரத்தாணிபோற் பதியச் செய்வதேயாம். இன்றேல் அஃது உயிரில்லா உடம்பையே நிகர்க்கும் என்பது ஆன்ருேர் துணிபு.

ஆகலின் இவ்வியாசம் அளவு கடந்து விரிந்து கிடப்பதாகக் காணப் படினும் கருத்தை வற்புறுத்தற் பொருட்டெனக் (Impressiveness) கருதி வெறுப்புக் கொள்ளாராக.

* * * * *

முற்கூறிய புண்டரீகன் சரிதை பெற்ருேர்ப் பேணலி னவசியத்தை நன்கு வற்புறுத்தும். இத்தகைய எண்ணிறந்த உளவேனும் விரிவஞ்சி விடுத்து இவ்வுண்மையை யறிந்தொழுகிய புகழாளர் பெற்றிகளைச் சிறிது பேசுவாம்.

இந்துக்கள், சைவவைணவ பேதமின்றி, வணங்கும் சக்காவர்த்தித் திருமகனுர் பட்டாபிஷேகத்திற்குச் சர்வசித்தமா யிருக்கையில் சிற்றன்னை யாகிய கைகேயி அழைத்ததாகக் கேள்வியுற்றுச் சென்ருர். சென்று, கைகேயியைக்கண்டு வணங்கி நின்றபோது, அவள் இராமபிரானைப்பார்த்து "அப்பா! இராமா! உன் தந்தை உன்னிடம் ஒருசேதி சொல்லச்சொன்னுர். அதாவது, உன்தம்பி பரதன் மணிமுடிதரித்து நாடாளவும் நீ சடைமுடிதரித்துப் பதினுன்காண்டு காடாளவும் கட்டளை யிட்டதாகச் சொல்லச் சொன்னுர்" என்ருள். உடனே அன்றலர்ந்த செந்தாமரையென விகசித்தது இராமர்வதனம். அவர் தம் தாயைநோக்கி, "அம்மா! அப்படியா! ஆயின் அடியேன் தன்யனேயாயினேன். சாரமற்ற சமுசாரமாகிற சாகரத்தழுந்தி நலியவிடாது கானகஞ்சென்று கடுந்தவம் புரிந்து கதிபெற்றுய்யக் கட்டளை யிட்டனரா? என் பாக்யமே பாக்யம். தாதையாராஞ்ஞையு மிவ்வாறிருக்குமோ வென்னு மையுறவின்று. இஃது தங்களுடையதாயினும் சாலுமே." எனக்கழறிக் காடுபுக்கார்.

பின்னர் தன் தமயனுர் அரணியம் போனதை யறிந்து சென்று, நாட்டிற்கு வரும்படி பரதன் அழைத்தபோது அப்புருடோத்தமர், "அப்பா பரதா! மகிதலத்துதித்த மக்கட் பிறப்பினர்க்கு மிகுந்த கேள்வியும், குற்றமற்ற ஞானமும், சீலமும், வினையின் மேன்மையும், தொழத்தகு தெய்வமுமாகிய சகலமும் குரவரே யெனக் கொள்வாயாக. அக்குரவராவார் யாவரோ என்பையாயின் தந்தை தாயரென்னு மிவர்களேயன்றி வேறெவரு மல்லர்!

"பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவரும்
குரவரே யாமெனப் பெரிது கோடியால்.

அந்த நற்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினல்
தந்தை தாயரென் றிவர்க டாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையே"

ஆகலின் தந்தையின் கட்டளைப்படி யொழுகுதல் நம் கடமை யென்றறி" எனத் தேற்றி யனுப்பினர்.

2. சந்திரகுலத்தில் யயாதி என்பா னெருவன் சுக்கிரன் மகளாகிய தேவயானை யென்னும் இல்லாளுடன் அத்தின நகரை அரசாண்டுகொண்டிருந்தான். அவன் ஓர்நாள் தன் பாரிக்குப் பணியாளா யிருந்த சன்மிட்டை யென்பாள் ஒரு காரியார்த்தமாய்த் தன்னெதிர் வரக்கண்டு, காதல்கொண்டு அவளைக் காந்தர்வ மணம் புரிந்தான். பின்பு சின்னுட்கழிய அவள் கருவுற்று அன்பே உருக்கொண்டதென்ன ஓராண்மகவைப் பயந்தனள். பூரு வென்று

நாமமிடப் பெற்று அச்சிறுவன் செவ்வனே வளர்ந்து வந்தான். இச்செய்தி பட்டமகிஷியின் காதிற்பட்டது. படவே அவள் சீற்றங்கொண்டு துணிந்து தன் தாதைபாற் சென்று நடந்ததை நவிலலும் இத்தனைக்கும் காரணம் வாலி பமே யாகலின், அவ்யயாதி விருத்தனுகக்கடவனெனச் சபித்தான் சுக்கிரன். தக்ஷணமே யயாதி நரைதிரைகளோடுகூடிய மூப்பைப்பெற்று உடல் நிகழ்வ தாகிய பிணிகளால் நலிவானுனன்.

இங்ஙனமாக, ஒருநாள் யயாதி தன்னிரு மனைவியரிடத்துந் தோன் றிய மூன்று புத்திரரையும் விளித்து, "மைந்தீர்! நும்மில் எவரேனும் நம் மிளமையை யெற்கீந்து எம்முதுமையை யேற்பீரோ" என்றனன். தேவ யானையின் மைந்தரிருவரும் உடன்படா தொழிந்தாராகப் பூரு வென்போன் "எந்தாய்! மாதா பிதாக்களுக்கு எவ்வகையானுயினும் மகிழ்ச்சி பெறுவித் தலே மக்கள் கடன். அவ்வாறு புரியாதோர் மக்கட் பகுப்பில் வைத்தெண் ணப் படுவாரல்லர். ஆகலின் யான் தாம் விழைந்தவாறு செய்வேன்" என்று கடவுளைத் துதித்துத் தன்னிளமையைத் தந்தைக்கீந்து அவர் முதுமையை யேற்றனன். இளமைப் பருவம் படைத்த எந்தலும் பல இன்பங்களைத் துய்த்துப் பின் வெறுப்புக்கொண்டு பழையபடியே தன் முதுமையை யேற் றுப் பூருவுக்குப் பூர்வ மிருந்த பருவத்தை அகமகிழ்ந் தீந்து பல ஆசிகள் கூறி அரியாசனத்தேற்றி அரசனுக்கினுன்.

இச்சரிதையை எழுதிய வில்லிபுத்தூரார், தந்தைக்குதவி செய்யாத காரணத்தால் தேவயானை 'இருவர் வெங்குமரரைப் பெற்ருள்' என்றும், அதைச் செய்த பூருவை, 'பூருவென்ருெருபுண்ணியப் புதல்வனைப் பெற் ருள்' என்றும் இகழ்ந்தும், புகழ்ந்தும் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

3. ஐவர் தம் பிதாமகனுகிய பீஷ்மரின் பிள்ளைத் திருநாமம் தேவவிர தன். அவர் சிறுவரா யிருந்த ஞான்று ஒருநாள் அவர் தந்தை சந்தனு வேட் டையாடக் கருதிக் காட்டக மடைந்தனர். சென்றுழி ஆண்டோர் கன்னி யைக் கண்டு காமுற்றுக் கடாவிய காலத்து, பரதவன் பாவையென்றறிந்து அவன்மாட் டணுகி, 'நின்மகளை எனக்கு மணமுடித்துத் தருவாயோ'? வென, அதற்கவன், 'ஐய! அவளகட்டுதிப்போனை அரயனுக்க வல்லிரேல் மகட்கொடை நேர்வேன்' என்ருன். அம்மாற்றங்கேட்ட மகிபன் மன மாழ்கி மாநகர்ப்புக்கு மகிழ்ச்சியற் றிருந்தனன். மன்னன் முகம் மாறுபட் டிருப்பதைக் கண்ட மைந்தன் உற்றதுணர்ந்து பரதவன் பாலேகி, 'ஐயா! நீயே என் பாட்டன். என் தாய் பாகீரதி யல்லள்; நின்மகளே. அவள் வயிற் றுதிக்கும் என் தம்பியே இவ்வரசுக் குரியான். இது காரணமாக மக்கட் பேற்றை யளிக்கும் மன்றலை நான் விழையேன். தேவர் சான்ருக இது சத்திய வாசகம். தக்ஷணமே மணம் முடித்தி,' என்றுறுதி கூறி அவளை உடன் கூட்டிச் சென்று தாதைபால் விடுத்தனன்.

சந்திரவதனியைக் கண்ட சந்தனு, வந்தவாறறிந்து சிந்தை மகிழ்ந்து மைந்தனை இறுகத் தழுவி 'அப்பா! உலகத்தில் ஒருவரும் புரியத் துணியாத காரியத்தை என் பொருட்டுச் செய்தாய். தன்னிளமையைத் தந்தைக் கீந்தவனும் உனக்குச் சமமாகான். தாதையர்க்குச் செய்யவேண்டிய கடமையினும் சதமடங்குதவினை. பாவியாகிய நான் தந்தை மகற் காற்று நன்றியிற் சிறிதும் இயற்றும் பாக்கியம் பெற்றேனில்லை,' என, வருந்தி 'நீயாக மாணத்தை விழைந்தாலன்றி யமன் நின்னுயிரைக் கவராதிருக்கக் கடவன்' என ஓர் வர மீந்தனன். இமையோர் மலர் சொரிந்து மிக்க பயங்கரமான விரதத்தை யுடையவன் எனப் பொருள்படும் வீடுமன் எனப் பெயரிட்டழைத்தனர்.

இப்புருடோத்தமர்களின் சரிதைகள் நாம் பெற்றோர் மாட்டு எங்ஙனம் ஒழுகல் வேண்டு மென்பதை யுணர்த்தவில்லை கொல்? இவற்றை நாம் உணரோமோ? இவற்றை யாராய்ந்தறியும் அறிவு நமக்கின்றோ? இருந்தும்,

'ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தாமடங்காப்
பித்தரிற் பேதையா ரில்' என்பதற்கிலக்காகவோ?

நாம் நமது பெற்றோரை முதுமைப் பருவத்தில் பயபக்தியுடன் ஆதரிக்கினன்றோ நம் மக்கள் நம்மை யாதரிப்பர். நமக்கொன்று பிறர்க்கொன்றோ? முத்தனுக் கடுத்ததுதானே முருகனுக்கும். பிறரை மதியாமைக்குக் காரணமான பணக்கொழுப்பு வாலிபச் செருக்காதிகள் என்றும் நிலைத்திருப்பனவோ?

தன் தகப்பன் கையில் ஒரு சட்டியைக் கொடுத்துப் புறக்கடையில் வைத்து நாய்க் கூற்றுவதுபோல் சிறிதுகூழ் ஊற்றிவந்த ஒருவன் மகன், அக்கிழவன் தன் பாட்டனென்றறிந்து, பரிதபித்து 'தாதா! நாளைக்குத் தவறி விழும் பாவனையாக விழுந்து அச்சட்டியை உடைத்துவிடு. பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன்' என்று உபாயம் சொல்லித் தந்தான். மறுநாள் கிழவன் சட்டியை யுடைத்தபோது, சிறுவன் ஓட்டமாய் ஓடி 'அடா பாவிக் கிழவா! என் குடியைக் கெடுத்தாயே. எங்கப்பனுக்குத் தரவேண்டுமென்றெண்ணியிருந்த சட்டியை யுடைத்து நஷ்ட முண்டாக்கி விட்டாயே. புதுச் சட்டி தானே எங்கப்பனுக்கு நான் வாங்கவேண்டும்' என வைதான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அவன் தந்தை திடுக்கிட்டு, அதுமுதல் கிழவனை மிக மேன்மையாக நடத்திவந்தான். உண்மைதானே.

நண்பர்களே! இத்யாதிகளால் மாதா பிதாக்களுக்குச் செய்யவேண்டிய கடமை மகா கடினமானதோ வென்றைய முண்டாகும்; அஃதொன்று மில்லை. மற்றென்னையோ வெனின், அவர்கள் உலகானுபவ முடையோரும் நமது நன்மையைக் கோருபவருமா யிருப்பதால் அவர்கள் கூறும் புத்திமதிகளைக் கேட்டு ஒழுகுதல் வேண்டும். நமக்காக எவ்வளவோ கஷ்டங்களை

யனுபவித்தவர்க ளாதலால் மனவருத்த முண்டாகா திருக்கவும், அன்ன வஸ்திராதிகளுக்கு முட்டுப்படா வண்ணமும் செய்தல் வேண்டும். வியாதி நேரிடின் தக்க வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்விக்க வேண்டும். மரண காலத்தில் அண்டையிலிருந்து உதவி புரிந்து மரண மடைந்தபின் ஈமக்கடன் முதலியவற்றைச் சிரத்தையோடு செய்து முடித்தல் வேண்டும்; இவ்வளவே. இவ்வாறாக, சிலர் உயிரோ டிருக்கையில் தடி யடி கொடுத்து இறந்தபின் ஊரார் மெச்ச உத்தரகிரியைகளை ஆடம்பரமாகச் செய்கின்றனர். இது எவ்வளவோ அறியாமை!

எவ்வளவு செய்தாலும் அவர்களின் ஒரு நாள் கஷ்டத்திற்கு ஈடாகாது.

கடலைப் போல் மாதா சகாயம்—அதற்கு
உடலைச் செருப்பாய் உதவலும் நியாயம்.

ஒரு கிராமத்தில் குடியானவ னொருவனின் குழந்தை யொன்று வியாதியால் வருந்திக்கொண் டிருந்தது. கைவைத்தியங்கள் பல செய்தும் பயன் படாமையால் பத்து மைல் தூரத்திலுள்ள ஓர் மருத்துவனிடம் கொண்டு போக வேண்டியதாயிற்று. வண்டியிற் போக வசதியில்லை யாகையால், எழு எட்டுப் பிராயமுள்ள அக்குழந்தையைத் தோளிற்சுமந்து சென்றான் தந்தை. அதற்கு என்ன வியாதி யெனில், ஆசனத் துவாரா இரத்தம்போன்ற மலம் சதா ஒழுகிக்கொண்டே யிருக்கும். இத்தகைய குழந்தையைச் சுமந்து செல்லுங்கால், அவன் எவ்வித துன்ப மடைந்திருக்க வேண்டும் என்பதை நண்பர்களே யூகித்துக் கொள்ளவேண்டும். இதற்குக் கைம்மாறு யாது?

இவ்வள வில்லாமற் போனாலும் இதிற் பாதியாவது ஒவ்வொரு பெற்றோரும் அனுபவிக்க வேண்டியவர்களே. ஆகவே மேற்கூறியபடி நாமியற்றும் கடமைகள் சதாம்சத்தில் ஒரு அம்சத்திற்கு மீடாகாதெனத் தேர்ந்து, பெற்றோரைத் தெய்வமாகக் கருதி அவர்கள் மனங் கோணாதபடி அவர்களுக்கு வேண்டியவற்றை யளித்துவரின் பரம பிதாவின் கருணைக் குரித்தாவது திண்ணம்.

'வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து—வையமதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை.'

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப் பண்டிதர், இராணிப்பேட்டை.

---

## நம் நாட்டுக் குறைகள்.

நண்பர்காள்! சென்றவருஷத்தில் எங்கள் நாட்டில் பெரும்பஞ்சம் வந்து, தாக்கியதற்குக் காரணமென்ன வென்று யோசித்த மாத்திரத்தில்

ஒரே யொருகாரணம் என்மனதில் புலப்பட்டது. அஃதாவது:—"மேழிச் செல்வம் கோழைபடாது" என்ற ஔவைவாக்கு அவம்போகாது "குருவிக் குத்தக்க ராகசுரம்" என்னும் பழமொழிப்படி தனக்குள்ள நிலத்தைப் பண் படுத்த, அதில் நெல், குரக்கன், சாமை, மரவள்ளி முதலியவைகளை உண்டாக்கி அந்த வரும்படியால் சீவிக்க முயலாது, இந்தியாவி லிருந்து, நெல், அரிசிவருகின்றதே, காசைக்கொடுத்துத் தேவையானதை வாங்குவோம். தோட்டச் செய்கை, வயற்செய்கை முதலியவற்றில் காலம் கழிக்கிறதிலும் ஆங்கிலேய பாஷை கற்றுக்கொண்டால் உத்தியோகம் செய்து வேண்டிய பொருள் சம்பாதிக்கலாமே என்று தனது அறிவைவளர்ப்பதை விட்டு, வயிறுவளர்க்கவே இந்த ஆங்கிலேய பாஷையை நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான ஆட்கள் கற்றும் கற்கத்தொடங்கியும் தங்கள் வீட்டைச்சுற்றி அடைத்திருக்கும் வேலி அறுந்திருந்தாலும் கட்டத்தெரியாது, தெரிந்தாலும் வெட்கித்துக் கூலியாட் பிடித்துச் செய்விக்கிறார்கள். கூலியாட்களைப் பிடிக்கிறதுதான் சுலபமா? இல்லை. ஒருகூலி வகுப்பைச் சேர்ந்தவனும் தனதுமகனை ஆங்கிலேய பாஷை கற்கத்தான் அனுப்புகிறான். இப்படி யிருந்தால், கூலியும் கிடைக்கவில்லை, தானும் கட்ட வெட்கமாயிருக்கிறது. "வேலி அம்பலம்தான். படலை சங்கடம்தான்" எங்கள் முற்பிதாக்கள் கொடுத்தகூலியிலும் பார்க்கப் பத்துமடங்கு கூலிகூட இப்போ கொடுத்தும், உடனே செய்விக்கவேண்டிய வேலை செய்வித்து முடிக்கப் பத்துநாட்களுக்குமேல் செல்லுகிறது. "தன்தொழில் விட்டவன் சாதியிற் கெட்டவன்" என்ற முதியோர் மொழியை மறந்து கஞ்சிக்குப் பயறு போட்டதுபோல் கொஞ்ச ஆங்கிலத்தைப் படித்து மலாய் நாட்டில் உத்தியோகம் பார்த்துத் தன் தாய்ப்பாஷையை மறந்து கீரைத் துரைக்கு விளையாடும் நண்பரை நினைக்கும் பட்சத்தில், மிதித்த கிளையையும், பிடித்த கிளையையும் விட்டவன்போல், மலாய் நாடு இப்போ இடம் கொடாததால், அவஸ்தைப் படுகிறார்கள் என நினைக்கிறேன்.

இனியாவது தனக்குள்ள நிலத்தை, வெட்கத்தைக் கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு, பண்படுத்தி அதில் வரும் பிரயோசனத்தால், பிறர் தயவிற்கு எதிர்பாராது சீவிக்குமாறு, என் நாட்டுச் சகோதரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

அ. ந. இரத்தினசிங்கம்,

யாழ்ப்பாணம்.

குறிப்பு:—நமது நாடு, எல்லாத் தொழில்களிலும் கௌரவமானவையும், உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவுமாகிய உழவு, வாணிபம் இவையிரண்டிலும் பூர்வீக முதல் முதன்மை பெற்றதாக விருந்தது. பிற்காலத்தில் பல காரணங்களால் நம்மவர் அத்தொழில்களை அகௌரவத் தொழில்

களாக மதிக்கவும், யாவற்றிலும் அதமத் தொழிலாகிய சேவகா விர்த்தி யையே மிகக் கௌரவமான தொழிலாகக் கருதி மிக்க ஆவலோடு அதிற் போய் அபரிமிதமாகச் சேரவும் தொடங்கியதே நமது நாடு இத்தகைய சீர் கேடான நிலைமையை யடைந்ததன் முக்கிய காரணங்களில் ஒன்ருகும்.

இக்காரணங்கள் நன்கறியப்பட்டு, நம் தாய் நாடு தன் பூர்வீக உன்னத நிலைமையை யடையும்படி செய்ய வேண்டுமென்று பெருமுயற்சி நடக்கும் இனியேனும் நமது நாட்டார் உழவு, வாணிபம், நெசவு முதலிய கைத் தொழில் ஆகிய கௌரவத் தொழில்களில் பிரவேசிக்கும்படி தம் மக்களுக்கு அறிவையும், ஆவலையு மூட்டவேண்டியது அவசியமாகும். பரம்பொருள் கிருபை பாலிப்பாராக. பத்திரிகாசிரியர்.

---

## ஸ்ரீ பஞ்சாக்ஷரம்.

**சகோதர சகோதரிகாள் !**

குற்றத்தைக் குறிக்காது குணத்தையே மேற்கொண்டு இச்சிறுவனை ஆசீர்வதிப்பீர்க ளென்ற முழு நம்பிக்கையுடன் வரையத்துணிந்த விடயம் தலைப்பில் காட்டிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமே !

பஞ்சாக்ஷரம் என்பது ஐந்தெழுத்தாலாகிய திருமந்திரம். மந்திரம் என்ருல்:—

மந்—நினைப்பவன்

திரம்—இரக்ஷித்தல், காத்தல். அதாவது, நினைப்பவனை இரட்சிப்பது, என்று பொருள்.

யாவனொருவன் யாதொரு மந்திரத்தை முறையாக நினைப்பானுயின், அம்மந்திரம் அவனைத் துன்பத்தினின்றுங் காப்பாற்றி நன்மையடையுமாறு அனுக்கிரகம் பண்ணு நிற்கும்.

“ மகாரம் மநநஞ்சைவத் ரகாரம் த்ராணமுச்யதெ
மநநத்ராணமித்யா ஹுர் மந்ர மித்யபிதியதே.”

என்பது பிரமாணம்.

மேல்காட்டிய பஞ்சாக்ஷர மென்பது நமசிவாய, என்னும் ஐந்தெழுத்துக்களாம். இதனை உச்சரிக்குங்கால் ‘சிவாயநம’ என்றமையும். இதற்குச் சூக்கும பஞ்சாக்கரம் என்றும் பெயர். இதன்பொருள்:—

சி = சிவம்
வ = அருள்
ய = ஆன்மா
ந = திரோதம்
ம = மலம்

“ சிவனருளாவி திரோதமல மைந்து மவனெழுத் தஞ்சி னடைவாம்’’ என்பதறிக.

அவற்றில் முன் இரண்டெழுத்துக்களும் பதியும், பின் இரண்டெழுத்துக்களும் பாசமும்; நடு எழுத்தொன்றும் பசுவுமாகும். பதிக்கும் பாசத்துக்கும் இடைப்பட்டதாய் பாசத்தோடு சேர்ந்து பாசமாயும், பதியோடு சேர்ந்து பதியாயும், பாசமும் பதியும் அல்லாமல் தயங்கும் தன்மையை யுடையது பசு என்னு முண்மை இதனுல் நிலைக்கும். பதியோடு கூடிய சம்பந்தத்தை ஞானநடனம் எனவும், பாசத்தோடு கூடிய சம்பந்தத்தை ஊனநடனமெனவும் பெரியோர் கூறுவர். ஊன நடனமொழிந்து ஞானநடனந் தானே ஆதரிக்கற்பால தென வேதாகமங்கள் முழங்கும். ஆகலால், நகார ம காரங்களாகிய மலங்களைப் பின்றள்ளி ய காரமாகிய ஆன்மா வ காரமாகிய அருள்கூட்டச் சிகாரமாகிய சிவத்தில் அதீதப்படும்.

இதற்குப் பிரமாணம்:—விருத்தாசல புராணம்.

“ மகர வக்காம் வல்லினந் துறந்திடை யினத்தில்
இகல றுத்தின மாக்கியே நகரம தீருய்
வகர வக்காத் தடங்கிட வொடுக்கிமற் றவைபோற்
றுகளி லாவினஞ் சேர்ந்துறுந் துறவர்பா னின்ருன் ”

(பொருள்) மகார அக்ஷரமாகிய திரோதாயி யை வல்லினமாகிய சி காரவக்ஷரத்தை விடுத்து இடையினமாகிய ய காரவக்ஷரம் என்னும் ஆன்மாவிற் பிரிவறவொடுக்கி, ந கார அக்ஷரமாகிய மலத்தை வ கார அக்ஷரமாகிய அருளிலொடுக்கி, அவைகளை ஒடுக்கினது போல, குற்றமற்ற இனங்களென்னும் ய கார அக்ஷரமாகிய ஆன்மாவை வ கார அக்ஷரமாகிய அருளிலொடுக்கி, அவ்வருளும் சிகார வக்ஷரமாகிய சிவமும் பேதமற்று அபேதமான அத்துவிதானந்த நிலையில் விளங்குகின்ற மூர்த்திகளான பெரியோர்களிடத்தில் அனுசரித் திருந்தான் சுவேதராசன்.

இதனைப் பிரகாராந்தமாகவும் காட்டி விவகரிப்பாம், எங்ஙனமெனின்,

நம — சீவான்மா
சிவ — பரமான்மா
ஆய — ஐக்கியம்.

(சிவ) பரமான்வாகிய பதிக்கும் (நம) ஜீவான்மாவாகிய பசுவுக்கும் (ஆய) அருட் பராசத்தி வாயிலாக ஐக்ய முண்டாமென்பது.

“ நம: பதம்தத்கலு ஜீவவாசீ
சிவ: பதம்தத் பரமாத்ம வாசீ
ஆயே திதாதாத்ம்ய மிதம் ப்ரசித்தம்
நமச் சிவாயேதி ஜகாத மந்த்ர:.”

என்னும் வசனத்தினுல் பிரகாசிக்கின்றது. இந்த பஞ்சாக்ஷரம் பிரணவத்தின் பொருளா யிருப்பதாலும் அதைப்போன்ற பிரமக்மந்திரமாதலா

160929

லும், பரம பாவ நகரமான மோக்ஷமந்திரமாகும் ஐந்தெழுத்துங் கூடிய இம்மகாமந்திரத்தின் முதலில் பிரணவமில்லை.

"வித்யாஸு ச்ருதி ருத்க்ருஷ்டா ருத்ரைகாதசி நீச்ருதௌ
தத்ரபஞ்சாக்ஷரீ தஸ்யாம் சிவ இத்யக்ஷர த்வயம்"

என்பதனால் வித்தைக ளெல்லாவற்றுள்ளும் சுருதியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும், உருத்திரை காதசினியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும் ஸ்ரீபஞ்சாக்ஷரமே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும் (சிவ) என்னும் த்வயாக்ஷரங்களே உத்கிருஷ்ட மானவையென்றும் தெரியவருகிறது. பிரணவம் வேறுதுணை வேண்டாது உச்சரிக்கப் படுவதேபோல், ஸ்ரீபஞ்சாக்ஷரமும் வேறொன்றின் ஆஸ்ரயமில்லாமல் ஜபிக்கப்படுதலால் இரண்டும் தம்மில் வேறுபடாத ஒரே மந்திரமாகும். இதன் மகிமையோ வெனின்:—

"ஐந்து பூதமைம் பொறிகளொ டைம்புல னமர்ந்த
வைந்தெ னுங்கரு மேந்திய மைவர்கா ரணரா
மைந்தெ னுந்தொழி லைம்பெரும் பிரமங்க ளனைத்து
மைந்தெ ழுத்தினி லுணர்த்துவ ரறிவறிந் தவரே"

"அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தன
னஞ்செழுத் தாற்பல யோனி படைத்தன
னஞ்செழுத் தாகிய வக்கர சக்கர
மஞ்செழுத் துள்ளே யமர்ந்திருந் தானே"

அதாவது பஞ்சாக்ஷரமாவது, நகார மகார சிகார வகார யகாரங்களாகிய ஐந்தெழுத்துக்களும் முறையே, பஞ்சபூதங்களையும், பஞ்சஞானேந்திரியங்களையும், பஞ்ச கன்மேந்திரியங்களையும், பஞ்சதன் மாத்திரைகளையும், பஞ்சகலைகளையும், பஞ்ச சாதாக்கியங்களையும், பஞ்ச சத்திகளையும், பஞ்சப் பிரமங்களையும், பஞ்சகர்த்தாக்களையும், பஞ்ச கிருத்தியங்களையும், பஞ்ச வர்ணங்களையும், பஞ்சபட்சிகளையும், தமதுள் அந்தர்ப்பவமாய்க் குறிப்பித்து விளக்கிக்கொண்டு சத்தார்த்தப் பிரபஞ்சங்களுக் கெல்லாம் பிரோகநிலயாதாரமா யிருக்கிறது.

இம்மட்டோ ?

'சிவ' என்னும் ஆணெழுத்தும் 'நம' என்னும் பெண்ணெழுத்தும் 'ய' என்னும் அலி எழுத்துஞ் சேர்ந்து பதி பசு பாசத்தி லடங்கும். இது உச்சரிக்கப் படுகிற முறைமையினாலே ஸ்தூல பஞ்சாக்ஷரம், சூக்ஷ்மபஞ்சாக்ஷரம், காரணபஞ்சாக்ஷரம், மகாகாரணபஞ்சாக்ஷரம், அதிசூக்கும பஞ்சாக்ஷரம் அல்லது மநாமநு என்று ஐவகைப்படும். போகத்தைக் கொடுக்கக் கூடிய ஸ்தூல பஞ்சாக்ஷரம், "நமசிவாய" என்றும், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் "சிவாயநம" என்றும் சொல்லப்படும்.

சூக்கும பஞ்சாக்ஷரத்திலுள்ள சிகாரம் சிவம், வகாரம் அருள், யகாரம் ஆன்மா, நகாரம் திரோதை, மகாரம் மலம். ஆதலின் இந்த முறைமையை யுணர்ந்து ஊனநடனமாகிய நகார மகாரத்திலே சென்று ஜனனமரணப் பட்டுப் போகாமல், ஞான நடனமாகிய சிகார வகாரத்தைப் பொருந்திச், சிகார முதலாக உச்சரித்து, அப்படி உச்சரிக்கிற முறைமையையும் விட்டு வகாரமாகிய ஞானம் தானுய் நிற்கவே, சிகாரமாகிய ஞேயத்திலே அழுத்து விக்கும். அது எப்படியெனில், சத்தியாகிய வகாரம் இடமாகச் சிவமாகிய சிகாரத்தின் இடையிலழுந்தவே அத்தன்மை யுண்டாக்கும். இந்த அநுபவ ரகசியத்தையும், பஞ்சாக்ஷரம் ஏகாக்ஷரமாமாறு வகாரத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும், அதில் யகாரமும் ஒடுங்கு முறைமையினையும், காரண பஞ்சாக்ஷரம், மகாகாரண பஞ்சாக்ஷரம், மகாமநு இந்த மூன்றையும் குருபரன் திருத்தாளைச் சேர்ந்து வழிபட்டுத் தெரிந்து கொள்ளலாம். இதுவே பிரம்மாநுபவம் என்னும் சுவாநுபவமாம். முடிவாக ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தால் ஒருவன் உணர்ந்து கொள்ள வேண்டியது யாதெனின் துக்கநிவர்த்தியும் சுகப்பேறுமேயாம்.

"பாசங்கழன்ருல் பசுவுக்கிடம் பதியாம்" என்னும் அநுபவவாளர் உரையே சான்ரும். ஆதலாலே,

"மெய்த்த வொண்சிவ தத்துவ மதனினு மேலாந்
தத்து வாந்தா மின்மைபோன் மறைகளின் றலையாய்
வைத்த வைந்தெழுத் தாகிய மந்திர மதனி
லுத்த ரம்பெறு மந்திர மிலையென வுணர்வாய்"

இதனுல் மூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திற்கு மேற்பட்ட மந்திரங்கள் இல்லையென விளங்குகின்றது.

"ஐம்ப தெழுத்தே யனைத்து வேதங்களு
மைம்ப தெழுத்தே யனைத்தாக மங்களு
மைம்ப தெழுத்தி னடைவை யறிந்தபி
னைம்ப தெழுத்தே யஞ்செழுத் தாமே."

"நமச்சி வாயவே ஞானமுங் கல்வியு
நமச்சி வாயவே நானறி விச்சையு
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே."

பிழையுளதேல் ஆன்ருேர் பொறுக்க.

வா. ர. வேணுகோபால் பிள்ளை,
செங்கழனி மேடு, வ்ாயலூர்.

## கைவல்ய நவநீத வசனம்.

(63-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஆசான் பின்னும் கூறுகிறார்.)

மைந்தனே! காரணத்தாலுண்டாயது காரியம். யாவற்றையும் அறியும் அறிவின் சொரூபமே காரணமாம். அறியப்படும் பொருள்கள் யாவும் காரியமாம். காரியமாகிய இந்நாமரூபப் பேய்கள் உண்டான விதம் எப்படி? தோன்றுமலழிவ தெப்படி? என்று அதைப்பற்றி விசாரித்தல் சற்றும் பயனில்லாக் காரியமாகும். ஆகையால் நீண்ட சொற்பனம் போன்ற இப்பிரபஞ்சம் உண்டான வழியையும், ஒழியும் வகையையும் பற்றி விசாரிப்பதை விட்டு, உன் ஆன்ம சொரூபமாகிய பரிபூரண அனுபவத்தில் நிலைத்து நிற்பாயாக.

[மாயை வந்த வழியையும், போம் வழியையும் அறிய முயல்வது பயனற்ற வேலை. மாயையை யொழிக்கும் வழி கூறப்பட் டிருக்கிறது. அவ்வழியில் முயன்று மாயையை யொழித்தால், பிறகு எல்லாம் தானே விளங்கும். மாயையின் வயப்பட்டிருக்கும் வரையில் அதன் இரகசியத்தை யறியவொண்ணாது என்பதாம்.

அறியப்படும் பொருள்களாகிய காரியத்தில் திருஷ்டியை விட்டால் மாயை யொழியும்.

"தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும் போதிற்
சேர்ந்தசுக வறிவுமிகச் சிறந்த தாகும்
தெரிபொருளால் விளைப்புண்டாற் பந்த மாகும்
தெளிபொருளை விட்டகன்றால் திடங்கொள் வீடாந்
தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும் போதிற்
சேர்ந்தவநு பூதியிடர் தீர்ந்த தாகுந்
தெரிவுறவாங் கதுபற்றி நிற்பாய் நீநின்
நிரநிலையாஞ் சுழுத்திதனைச் சேரு வாயே."

(வாசிட்டம்.)]

(நாமரூப திருட்டி எவ்வளவு விடப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஆன்ம சொரூபம் தோன்றுமென்று ஆசான் கூறுகிறார்.)

மைந்தனே! அசத்தாகிய நாமரூபத்தில் உள்ள பற்று எவ்வளவுக் கெவ்வளவு விடப்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அந்தர்முகத் திருஷ்டி யுளதாகும். இவ்வாறு நீடித்துச் செய்யும் அப்பியாசத்தால் உன் மனம் உன் வசப்பட்டு ஆன்ம சொரூப மாத்திரமாகிய நிலைபெறும். அந்த நிலையை யடையின் துக்கமயமான இத்தூல தேகத்தி லிருப்பினும் ஆனந்தக் கடல் மயமாவாய்.

[நாமரூப நாட்டம் விடின் சச்சிதானந்த சொரூபந் தோன்றும். ஜீவன் முத்த நிலை யுண்டாகும். மேலே கூறியபடி காணப்படுபவை யனைத்தும் மாயையே. நம்மாற் காணப்படும் அவை யனைத்தும் நாமல்லவென்று நீக்கி, யாவற்றையுங் காணும் அறிவு சொரூபமாகிய நம்மையே நாம் காணவேண் டும். அந்தர்முக நாட்டத்தாலடையும் பயன் இதுவேயாம். இதுவே தன்னைத் தானறிதல் என்பதும்.

"தானறியுந் தத்துவங்க ளெல்லாந் தனக்கனியந்
தானதுவே யன்றென்று தள்ளுங்கான்—ஞானமாய்த்
தள்ளுமவ னுயிருக்குந் தன்னுற்ற னென்றுணர்ந்து
கொள்ளுமது வேசாந்த மாம்." (சொரூபசாரம்.)

நாமரூப நாட்டமே பகிர்முக நாட்டம் என்பது. அந்த நாட்டம் ஒழிந் தால் பிரபஞ்சத் தோற்றா வொழிந்து அந்தர்முக நாட்ட முதிக்கும்.

"எதுபரி யந்தம் வெளிமுகப் பார்வை
யிருக்குமவ் வளவுமே விகற்பத்
திதியுறு பிரபஞ்ச பாவனை தோன்றுஞ்
செழுங்கட லலையசை வுளதே
லுதைந்திடுங் கரையை யொழிந்திடி னிலைத்த
வுதகமே போலுமெய்ப் பிரமஞ்
சுதந்தர வடிவாய் நிறைந்திடிற் சோகந்
தோன்றிடா தெனத்துணி மகனே"
(வாசிட்ட வமல ராமாயணம்.)]

(ஆன்மா சச்சிதானந்த சொரூபமெனின், சத்தும் சித்தும்போல் ஆனந்தம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஏன் விளங்கவில்லை எனச் சீடன் வினுதல்.)

சீடன்:—குருநாதனே! தன்னையன்றி அந்நிய மொன்று மில்லாத ஆன்மா பூரண சச்சிதானந்த சுபாவமாய் உயிரோடு ஒன்று யிருக்கிற தென்னின், அடியேனுக்கு அது விளங்கவில்லை. நான் கண்டேன், கேட்டேன் என்று விவகரிக்கும் இச்சீவன்கள் சத்தென்பது கூடும். அப்படியே, விஷயங்களை வேறு பிரித்தறியும் ஞானம் இருத்தலால் சித்தென்பதும் கூடும். இவற்றைப்போல் எல்லா விஷயங்களிலும் ஆனந்தம் தோன்ற வில்லையே. அது ஏனோ அறிவிக்க விரும்புகிறேன்" என்றான்.

குரு:—குழந்தாய்! ஒரு மலரில் நிறம், இரசம், மணம் மூன்றும் ஒன்றாய்க் கூடியிருந்தாலும், ஒவ்வொரு இந்திரியத்தால் ஒவ்வொரு குணம் தோன்றுமன்றி ஒரே யிந்திரியத்தில் அம்மூன்றும் தோன்றா. அவ் வாறே சத்து, சித்து, ஆனந்தமாகிய குணங்கள் ஆன்மாவின் சொரு பமேயாயினும், பிரபஞ்ச மயமான விர்த்திகளின் பேதத்தால் பேதங் களாக உணரப்படும்.

சத்துவம், இராசதம், தாமதம் எனக் குணங்கள் மூன்றாகும். இம்மூவித குணங்களால் உண்டாகா நின்ற விர்த்திகளும் மூன்று வகையாகும். இவற்றில் சத்துவ குணம் சாந்த விர்த்தியும், இராசத குணம் கோர விர்த்தியும், தாமத குணம் மூட விர்த்தியுமாகும். நாம் கூறும் சத்து, சித்து, ஆனந்தமாகிய குணங்கள் ஆன்மாவின் கண் ஏகரசமாகவே யிருப்பினும், இவ் விருத்தி பேதத்தால் பேதமாகத் தோன்றும்.

சடமாகிய மரம், கல், மண் முதலியவற்றில் சத்து ஒன்று மட்டுமே வெளியாகும். சித்தும், ஆனந்தமும் வெளியாகா. காமக் குரோதாதி குணங்களாகிய கோர விர்த்தியிலும், மயக்கம், பயம் முதலிய மூட விர்த்தியிலும் சத்து, சித்து இரண்டு குணங்களே வெளியாகும். பொறுமை, கருணை முதலிய சாந்த விர்த்தியில் சத்து சித்தோடு ஆனந்தமும் சேர்ந்து மூன்று குணங்களும் வெளியாகும். ஆதலின், அஞ்ஞானத்தா லுளவாகும் காமக் குரோதம், மோகம், பயம் முதலிய கோர மூட விர்த்திகளை விட்டு நீங்கி வைராக்கியமும், சாந்தமும் பொருந்திய மனதோடு அந்தர்முக விர்த்தி யுண்டாயின் ஆனந்தம் வெளிப்படும். இவ்வாற்றால் சத்தும், சித்தும்போல ஆனந்தமும் ஆன்மாவின் சொருப மென்றே யுணர்வாயாக.

(சீடன் சச்சிதானந்த விலக்கணம் கேட்டல்)

சீடன்:—“ பரமாசாரியரே ! இந்தச் சச்சிதானந்தம் என்பதன் இலக்கணம் அடியேற்கு விளங்கவில்லை. ஆதலின் சத்து என்பதென்ன ? சித்து என்பதென்ன ? ஆனந்தம் என்பதென்ன ? என்று விளக்கிவைக்கப் பிரார்த்திக்கிறேன் ” என்றான்.

ஆசான், மைந்தனே !

சத்து:—முக்காலங்களிலும் கெடாமல் இருப்பதுவே சத்தின் இலக்கணமாம்.

சித்து:—விடயங்களில் வேறு பாடுகளை யறிதலே சித்தின் இலக்கணமாம். (சுயப்பிரகாச முடையதாய்த் தன் பிரகாசத்தாலேயே யாவற்றையும் பிரகாசிக்கச் செய்வதே சித்தின் இலக்கணம்)

ஆனந்தம்:—நாம் இஷ்டப்பட்ட வஸ்து கிடைத்து அதை யனுபவிக்கும் போதுண்டாகும் திருப்தியே ஆனந்த இலக்கணமாம்.

[இந்திரியங்கள் கரணங்கள் முதலிய யாவற்றையும் பிரகாசிப்பிப்பது ஆன்மாவே; ஆன்மா தவிர மற்றயாவையும் சடமாம். ஆன்மா ஞானசொருபம். ஞானம் என்பதே பிரகாசம். ஞானம் ஆன்மாவைவிட்டுப் பிரிந்திருப்பதல்ல. நித்திரையின்போது இந்திரியாதிகள் இல்லாதிருந்தும் விழித்தபின், “நான் சுகமாய் நித்திரை செய்தேன்” என்று கூறுகிறான். “ஆன்மாவை விட்டு ஞானம் பிரிந்தில்லை யெனின் எல்யாவரும் ஞானிகளாயில்லை ?”

எனின், தீபம் பிரகாச முடையதாயினும் மூடுபனியில் அதன் பிரகாசம் புலப்படுவதில்லை. அதுபோல் அவித்தையில் மறைப்புண் டிருப்பதால் ஞானம் மங்கியிருக்கிறது. அவித்தை நீங்கின் அதன் பிரகாசம் வெளிப்படு கிறது. நாம் அதை ஞானம் உதித்தது என்கிறோம். உண்மையில் இருந்த ஞானமே பிரகாசிக்கத் தொடங்கிய தன்றிப் புதிதாய் ஞானம் உண்டாவ தில்லை. அவ்வாறே ஆன்மா ஆனந்த சொரூபமாம். சடப்பொருள்கள் எத னிடத்திலும் ஆனந்தம் என்ற குணமில்லை. எப்படி யெனின், ஒருவனுக்கு ஒரு பொருளில் உதிக்கும் ஆனந்தம் அதே பொருளில் மற்றொருவனுக்கு உதிப்பதில்லை. அல்லது அதே பொருளில் மற்றவனுக்கு வெறுப்புண்டா கிறது. ஆனந்தம் அவ்வஸ்துவிலுள்ளது உண்மையாயின் மற்றவனுக்கும் அதில் ஆனந்தம் ஜனிக்கவேண்டும். ஆனந்தம் ஆன்மாவினிடத்தே யுள்ள தென்பது சுருதியுக்தி யனுபவ சம்மதம்.]

(சீடன் ஆன்மாவினிடத்தில் சச்சிதானந்த லட்சணம் உண்டென்று எந்த அநுபவத்தா லுணர்வதென வினவுதல்)

சீடன்:—“குருநாதனே! அழிந்து போகும் இச் சரீரத்திலுள்ள சீவனை நோக்கி நான்குவேத மகாவாக்கியங்களும் ‘நீ சச்சிதானந்தப் பிரம்ம மாயிருக்கிறாய்’ என்று கூறினும், ‘நீயே அச்சச்சிதானந்த பிரம்மம்’ என்று ஆசிரியர் உபதேசிக்கினும், நம்மிடத்தே அச்சச்சிதானந்த லட் சணம் இருக்கிறதென்று ஆன்மா எந்த அநுபவத்தா லுணரலாகும்? அடியேற் கருள்புரியப் பிரார்த்திக்கிறேன்” என்றான்.

(ஆன்மாவினிடம் சச்சிதானந்த இலக்ஷணம் உண்டென்பதை ஆசான் நிரூபிக்கிறார்)

## ஆன்மா சத்து எனல்.

முன் ஜன்மத்தில் செய்த கர்மபலத்தினாலேயே நீ இச்சன்மமெடுத்து பூர்வஜன்மத்தில் செய்த பிராரப்த பலன்களை யனுபவிக்கிறா யெனில், சென்றகாலத்தில் நீயுண்டு என்று தெரிகிறதல்லவா. அவ்வாறே இச்சன் மத்தில் செய்யும் கன்மங்களுக்காக சொர்க்க நரகபோகங்களை யனுபவிக்க மேல் சன்மங்க ளெடுக்கப்போகிறாய் யாதலால் எதிர்காலத்திலும் நீயுண் டல்லவா. இவ்வாறு நீ, யாதனாசரீரம் தேவசரீரம் மானிடசரீரம் இவற்றை மாறிமாறி யெடுத்தாலும், அத்தேகங்க ளழிகின்றனவே யன்றி நீயாகிய ஆன்மா அழிவதில்லை யாதலால் நீ சத்தாகும்.

[இச்சன்மம் வந்ததற்குக் காரணம் முன்சன்மத்தில் செய்த கன்மங்க ளாகும். அவ்வாறே அச்சன்மம் வந்ததன் காரணம் அதற்கு முன்சன்மத்தில் செய்த கன்மங்களாகும். இவ்வாறே உத்தரோத்தரம் ஜன்மங்கள் அநாதி தொடங்கி யிருப்பதாலும், இனிமேலும் இச்சன்மத்தில் செய்யும் கன்மங் களால் இன்னொரு சன்மமும், அதிற்செய்யும் கன்மங்களால் மேலொரு சன்

மமும் இவ்வாறே முடிவின்றி ஜன்மங்கள் வருமென்று தெரிவதாலும், அப்படிக்கின்றி ஜன்மம் ஒழிவதாயின் ஆன்மா அழியாத முத்திநிலையில் சேர்வதாலும், ஆன்மா என்று மழியாமல் இருக்கும் சத்தென்பது விளங்குகிறது.]

### ஆன்மா சித்து.

காடாந்த காரமான சுழுத்தியில் யாவும்தோன்ருமல் மறைந்திருக்கும் போது, மயங்காமல் அவித்தையாகிய இருளையும், ஆனந்தமாகிய பொருளையும் அறிவதாலும், சூரியசந்திராதி பிரகாசமில்லாத இராக்காலத்தில் இருளில் சாமான்ய ஸ்பரிசத்தால் பொருள்களை அறிந்து கொள்வதாலும், சொர்ப்பனத்திலும் ஆன்மா வேறு பிரகாசத்தை விரும்பாமல் திரிபுடிகளையும் பிரகாசிப்பிக்கின்றதாலும், ஆன்மா சித்தென்ப தனுபவமாம்.

### ஆன்மா ஆனந்தசோரூபம்.

யாவர்க்கும் மற்ற எல்லாப் பொருள்களைக் காட்டினும் தன்னிடத்தில் தான் அதிகப் பிரியமாதலானும், உலகத்தில் யாவர்க்கும் சுகத்தினிடத்தில் தான் பிரிய முண்டாவதன்றித் துக்கத்தினிடத்தி லுண்டாவதில்லை யென்பது பிரசித்தமாதலானும், ஆன்மா சுகசொரூபம், அதாவது ஆனந்தசொரூபம் என்பது அநுபவம்.

" நானே யென்று மெவ்விடத்து நன்ரு யுண்டா யிருக்குகேன்
நானே யென்று மெவ்விடத்து நன்ருய்த் தோன்றி விளங்குகேன்
நானே யென்று மெவ்விடத்து நன்ருயின்ப மாய் நிகழ்கேன்
நானே யென்று மெவ்விடத்து நன்ருய் விளையா டாநிற்கேன்."
(விஞ்ஞானசாரம்)

இவ்வாற்ருல் ஆன்மா சச்சிதானந்த இலட்சணமுடைய தென்பது அநுபவ சித்தம்.

(தொடரும்)
சீடன்.

---

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

1. ஏழாவது வருட முதல் மாதமாகிய ஆடிமாதம் யாவர்க்கும் வி-பி-க்கள் அனுப்பப்பட்டபோது தபால் ஆபீஸில், அவை யொவ்வொன்றும் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியிருந்த படியால், தினம் 500—600 தான் எடுத்தார்கள். ஆதலால் வி-பி—க்கள் மிக்க ஆலசியமாகச் செல்ல நேர்ந்தது. அதனுல் அவற்றிற்குப் பணம்வரவும் ஆலசியமானதால் ஆவணிமாத சஞ்சிகையனுப்ப ஆலசியம் நேர்ந்ததுபற்றி நேயர்கள் பொறுத்துக் கொள்ளக் கோருகிறோம்.

2. இப்போது வி-பி. யனுப்பினுல் ரிஜிஸ்டர் செலவோடு தபால் கூலியும் இரண்டத்தனை யாதலால், இனி வி-பி-யில் அனுப்பும்படி எழுதுவோர்க்கு, ஆடிமாத சஞ்சிகை ஒன்றுமட்டுமே முதலில் அனுப்பப்படும்.

பணம் வந்தபிறகு மற்றவை யனுப்பப்படும். முதலில் முன் சஞ்சிகைகளைச் சேர்த்தனுப்பினால் வி-பி. வாபீஸாகிவரின் நமக்கு அதிக நஷ்டம் நேரிடும்.

முன்பணமனுப்பிப் பெற்றுக் கொண்டால் செலவு குறைவதோடு சஞ்சிகைகளும் ஆலசியமின்றி முதலிலேயே வந்துசேரும் என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

3. "ஆனந்தபோதினி" முதல்வருட சஞ்சிகைகள் சீக்கிரம் அச்சிலிருந்து புத்தகரூபமாக வெளியாகி விடும்; இப்போது கட்டளையனுப்பியிருக்கிறவர்களுக் கெல்லாம் உடனே யனுப்பப்படும்; பிரசுரமும் செய்யப்படும்.

பத்திராதிபர்.

---

## "நல்லாயன்" தவறுதலும்

## D. G. A. பர்னாண்டஸ் என்பாரின் போய்க்கூற்றும்.

நேயர்களே! கடந்த ஆவணிமாதச் சஞ்சிகையின் 68-ம் பக்கத்தில் மேற்கண்ட தலைப்புள்ள ஒரு விஷயத்தை நாம் பிரசுரம் செய்திருந்ததையும், அதேவிஷயத்தைப்பற்றி, ம-ா-ா-ஸ்ரீ S. S. Pillay என்ற நண்பர் நடுநிலைமையில் நின்று "ஆனந்தபேதினியின்" பஹிஷ்காரமும், 'உண்டசோற்றுக்கு இரண்டகமும்' என்ற தலைப்பிட் டெழுதிய வியாசத்தையும் அனைவரும் வாசித்திருப்பீர்க ளென்று நம்புகிறோம். அதற்கு விடையாக நல்லாயன் ஆசிரியர் செப்டம்பர்ஸ்ரீ வெளிவந்த தமது சஞ்சிகையின் 200-ம் பக்கத்தில் "ஆனந்தபோதினியும் கிறிஸ்துவர்களும்" என்ற தலைப்பிட்டு அடியிற் கண்ட விஷயங்களை வரைந்துளார்:—

"ஆனந்தபோதினி" ஆசிரியர் தமது ஆகஸ்டு மாத சஞ்சிகையில், "நல்ல ஆயன் தவறுதல்" எனும் தலைப்பிட்டு ஒரு குறிப்பு எழுதியுள்ளதை நமது நண்பர்களிலொருவர், நாம் நமது பத்திரிகையை எழுதிமுடித்துக்கொண் டிருக்கையில் நமக்குக் காண்பித்தார். அதற்குத் தக்கபடி மறுப்பு எழுதக் காலமும், பத்திரிகையில் இடமும் போதாமையால், இவண் அதைப்பற்றி வெகு சுருக்கமாகவே எழுதவேண்டிய தாகிறது.

ஷை ஆசிரியர் நம்மீது கொண்டுவந்திருக்கும் குற்றமாவது, அவர் குறிப்பிட்ட ஒரு கடிதக்காரரின் கூற்று உண்மையா அல்லவா என்று ஆராய்ந்தறியாமல் நாம் அதை வெளியிட்டோம் என்பதே. உண்மையையும், இன்மையையும் ஆராய நமக்கு அவகாசமில்லை. அது எப்படியாயினு மாகுக. ஆனல் பொதுவாக ஒரு இந்து மதப் பத்திரிகையை நமது கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் படிப்பதால் அவர்களுக்குள்ள வேத விசுவாசத்துக்குப் பலவகையால் பங்கம் நேருமென்பது பற்றி, "ஆனந்தபோதினி"யின் பஹிஷ்காரத்தைப் போதித்த கடிதத்துக்கு நம் பத்திரிகையில் இடந்தரலானோம். இதுவே நமது நோக்கு. இதற்குமேல் இதைப்பற்றி எழுத எமக்கு இஷ்டமில்லை.

இது நிற்க, " ஆனந்தபோதினியின் பஹிஷ்காரமும், உண்ட சோற்றுக்கு இரண்டகமும் " என்னும் மகுடம் பூண்டதோர் கடிதமும் எமக்குக் காட்டப்பட்டது. இதைப்பற்றியும் இரண்டொருவார்த்தைசொல்ல விரும்புகிறோம். இதை எழுதியதாக கைச்சாத்திட் டிருக்கும் 'S. S. Pillai' என்பார் உண்மையான கத்தோலிக்குக் கிறிஸ்துவரோ அல்லரோ என்ற சந்தேகம் எமக்கு உதிக்கிறது. " எம்மதமும் சம்மதம் " என்கிற கொள்கையை அவர் ஆதரிக்கிறவரானல் அவர் அல்லரென்றே சொல்லவேண்டும். எனெனில் உண்மைக் கத்தோலிக்க ரெவரும் எம்மதமும் சம்மதமெனக் கொள்ளார். மெய்யான கடவுள் ஒருவரே, சத்திய வேதம் ஒன்றே, உண்மையொன்றே.

கத்தோலிக்கு வேதத்தையாவது, கத்தோலிக்குக் குருக்களேயாவது, அவர்கள் தங்கள்வேதம் பரம்புதல் விஷயமாகச் செய்யும் ஏற்பாடு, நடவடிக்கைகளையாவது கண்டித்து, அல்லது அவமதித்துப் பேச அல்லது எழுதப்படுவதைக் கேட்க, பார்க்க எந்தக் கிறிஸ்துவனும் சகியான். அப்படிப் பேசும் நபரை, எழுதும் பத்திரிகையை பஹிஷ்காரம் செய்யாமலிரான். அப்படிச் செய்யாதவன் உண்மைக் கத்தோலிக்குக் கிறிஸ்துவனல்லன்.

பத்திராதிபர் "

நேயர்களே! இதிலுள்ள நியாயத்தைப்பற்றி இதை வாசிப்போரே அறிந்து கொள்ளலாகும். ஆதலின் நாம் இரண்டொரு விஷயங்களைப்பற்றி மட்டும் கூறுகிறோம். அவ்வாசிரியர் தமது பத்திரிகை முடியும்சமயம் நமது வியாசத்தைக் கண்ணுற்றதாகக் கூறுகிறார். ஆனல் நமது சஞ்சிகையோ ஆகஸ்டுமீ 16-17உ களில் யாவர்க்கு மனுப்பப்பட்டபோதே எப்போதும் போல் மாற்றுப் பத்திரிகையாக அவருக்கும் அனுப்பப்பட்டது.

அவ்வாசிரியர் தம்மிடம் வந்த ம-া-ஸ்ரீ D. G. A. பர்னண்டஸ் என்பவருடைய கடிதத்தில் கூறப்பட்ட விஷயங்கள் உண்மையா வென்று ஆராயாமலே வெளியிட்டார் என்பது அவருடைய கடிதத்தின் இரண்டாம் பத்தியில் அவரே ஒப்புக் கொள்வதால் தெற்றென விளங்குகிறது. " அது எப்படியாயினுமாகுக " என்கிறார். இதனல் இவர் தமது ஆசிரியர் கடமையை யெவ்வளவு நெறியோடு நடத்துகிறா ரென்பதை இதை வாசிப்போரே தீர்மானித்துக் கொள்ளலாகும்.

மேலும் ஹிந்துமதப் பத்திரிகையைக் கத்தோலிக்கு கிறிஸ்துவர்கள் படிப்பதால் அவர்களுக்குள்ள வேத விசுவாசத்திற்குப் பலவகையால் பங்கம் நேருமென்பது பற்றி " ஆனந்தபோதினியின் " பஹிஷ்காரத்தைப் போதிக்கும் கடிதத்தைத் தாம் பிரசுரித்ததாக அவரே கூறுகிறார்.

காத்தோலிக்கு கிறிஸ்துவர் ஹிந்துமதப் பத்திரிகையை வாசித்தால் அவர்கள் வேதவிசுவாசத்திற்குப் பங்கம்வரும், அதாவது கிறிஸ்துமதத்திலுள்ள

அவர்கள் நம்பிக்கை யழிந்துபோம் என்று இவர் அஞ்சுகிறார் என்பதும், கிணற்றுத்தவளை கிணற்றைவிட்டு வெளிச்சென்றால் கிணற்றினும் பெரிய நீர் நிலைகளுண்டென்று தெரிந்துகொள்ளு மாதலால், அதை வெளியில் உள்ள நீர் நிலைகளைக் காணவிடா திருந்தால்தான், அத்தவளை தானிருக்கும் கிணற்றினும் பெரிய நீர் நிலை உலகிலில்லையென்ற குருட்டு நம்பிக்கை யோடிருக்கும் என்று இவர்கருதுவதும் நாம் கூறாமலே வெள்ளிடை மலை போல் நன்கு விளங்குகின்றன. அந்தோ! ஹிந்துமதப் பத்திரிகைகளை கிறிஸ்தவர் வாசிக்கலாகாதென்ற இவர், ஞானம், வேதம் என்பனவாகிய பதங்களை எம்மத நூலிலிருந்து எடுத்துக் கையாளுகிறாரோ? ஞானம் என்பது இன்னதென் றுணராதிருந்தும், அன்னிய மதத்தினரை யெல்லாம் அஞ்ஞானிகள் என்று எவ்வாறு தூஷிக்கிறாரோ? அதையவர் மனச்சாட்சியே யவருக்கு அறிவுறுத்த வேண்டும். ஒருவன் அன்னியமத நூல்களையும் ஆராய்ச்சி செய்வதால் அவன் அறிவு விசாலித்து, உண்மையெங் கிருப்பினும் அதைக் கிரகித்து, ஞானம் விர்த்தியடையும் என்ற உண்மையைப் பத்திரிகாசிரியராக விருக்கும் ஒருவர் உணராதிருத்தல் மிக்கபரிதாபமே.

கடைசியில் நடுநிலைமையில் நின்று உண்மை நீதியைக்கூறிய ம-௱-௱-ஸ்ரீ S. S. Pillay அவர்கள் (அவர் "எம்மதமும் சம்மதம்" என்ற கொள்கையை யுடையவரானால்) உண்மைக் கிறிஸ்தவரல்லரோ வென்று தமக்குத் தோன்றுவதாக வரைகிறார். உலகப்பிரசித்திபெற்ற ஆன்றோர்க ளனைவரும் ஒப்புக்கொள்ளும் "எம்மதமும் சம்மதமே" என்பதற்கு இவருடைய குறுகிய மனதில் என்ன அர்த்தம் கொண்டிருக்கிறாரோ நாம் அறியோம். அதோடு கத்தோலிக்கு குருமார் தங்கள் வேதம் பரவுவதற்கு எத்தகைய ஏற்பாடுகள் நடவடிக்கைகள் செய்தாலும் எந்தக் கத்தோலிக்கு கிறிஸ்தவரும் அதைக் கண்டித் தெழுதலாகா தென்றும், அப்படி யெழுதுவதைக் கண்டு மனம் சகிக்கலாகா தென்றும், ஜாடையாய்ப் போதிக்கிறார்; அதாவது இவர்கள் மதத்தைப் பரவச்செய்வதில் எத்தகைய நெறிதவறாக நடந்து கொண்டாலும் நமது கிறிஸ்தவ சகோதரர்கள் அதற்குச் சம்மதித்து நடக்கவேண்டும் என்கிறார். "மெய்யான கடவுள் ஒருவரே" என்கிறார். இதனால் மற்ற சமயங்களில் கூறப்படும் கடவுள்கள் வெவ்வேறான பொய்க் கடவுள்கள் என்று இவர் கருதுவதாகத் தெரிகிறது. இவர் தம் அறியாமை இருந்தவா றென்னே!

இதுவன்றோ ஒரு குருவின் உயர்ந்த போதனை; அறிவாளிகளே இதைச் சிந்திக்கவேண்டும். நேயர்களே! ஈண்டொரு விஷயம் கூறுவது அவசியமாகிறது. அதாவது இத்தகைய போதனைக்கும், இவர்கள் அளிக்கும் பரிசு முதலியவைகளுக்கும் சிலர் உடன்பட்டு எத்தகைய சூதும் தந்திரமுமான வழிகளிலும் பிரவேசித்து நமது மதத்தவர்களைப் பல விதங்களில்

மயங்கச் செய்து தங்கள் மதத்திற்கு இழுத்துக் கொள்கிறார்கள் என்ற உண்மையனுபவத்தால்தான் நாம் நமது மதத்தவர்க்கு எச்சரிக்கை செய்ய வேண்டுவது அத்தியாவசியமாயிற்று.

நேயர்களே ! இந்துசகோதரர்கள், கிறிஸ்து சகோதரர்கள் இருவர்களுக்கும் நாம் இப்போது முடிவாகக் கூறுவதாவது:—

"நல்லாயன்" பத்திரிகாசிரியராவது அவருக்குக் கடிதமெழுதியவராவது "ஆனந்தனில்" கிறிஸ்துமதத்தூஷணை யெங்கேனு மிருப்பதாக நிரூபிக்கவில்லை. இல்லாததை நிரூபிக்கவும் முடியாது. "நல்லாயன்" ஆசிரியர் தமக்கு வந்த கடிதத்தில் கூறப்பட்டது உண்மையா வென்பதை யறிய முயலாமலே மதத்துவேஷத்தால் அதைப் பிரசுரித்து விட்டார் என்பது வெளிப்படை.

தம்மதத்தில் உண்மையான பற்றுடையோர் அன்னியமதச் சம்பந்தமான விஷயங்களை வாசிப்பதால் இன்னும் அறிவு விசாலமும், உண்மைஞானமும் அடைவார்களேயன்றித் தம்மதத்தில் விசுவாசத்தை யிழக்கார்க ளென்பதற்கும், "ஆனந்தபோதினியில்" மததூஷணை எள்ளளவு மில்லை யென்பதற்கும் அத்தாட்சியாக இதே விஷயத்தைப்பற்றி இன்னொரு கிறிஸ்தவ சகோதரர் நமக்கு வரைந்த கடிதத்தைமட்டும் இதனடியில் பிரசுரித்து இதை யித்தோடு முடித்து விடுகிறோம்.

பத்திரிகாசிரியர்

---

## " நல்லாயன் " நலமின்மையும், " ஆனந்தபோதினியின் " அருமையும்.

காலத்தின் சக்கரமோ நிமிஷ மென நல்லோர் பொல்லார் யாவருக்கும் ஒரே விதத்துடன் ஓடுகின்றது. நாட்கள் செல்லச் செல்ல மனிதனின் ஆயுள் குறுக இவன் மரணம் என்னும் ஓர் பந்தனத்தால் கட்டாயங் கட்டுப்படவேண்டியவ னாகின்றான். இவ்வளவு காலத்திற்குள் மனிதர்களின் அகங்காரந்தான் என்னே ! ஜாதி மத துவேஷங்களைக் கொண்டு ஒருவரை யொருவர் வெல்ல வேண்டுமென முயற்சி செய்து இகத்திற்கும், பரத்திற்கும் தூரவிலகி நிற்கிறார்கள். இப்பேர்ப்பட்ட ஜன்மங்கள் மானிட வுருவந் தாங்கிப் புண்ணிய புருடர்க்குத் துன்பமா யிருப்பதைப்பார்க்கிலும் இவர்கள் பிறவாம லிருந்தால் வெகு நலமா யிருக்கும்.

இப்போது சென்ற ஆகஸ்டுமாதம் வெளிவந்த "நல்லாயன்" என்னும் மாதாந்தச் சஞ்சிகையில் ம-அ-அ-ஸ்ரீ D. A. G. பர்னாண்டஸ் (வைகைவாசி) என்பார் " ஆனந்தபோதினி " யில் கிறிஸ்துமத துவேஷங்கள் பொதியப் பெற்றிருப்பதால் அம்மதத்தினைச் சார்ந்த சந்தாநேயர்கள் யாவரும் " ஆனந்தபோதினி " யைப் பகிஷ்காரஞ் செய்ய வேண்டு மென்று வரைந்துள்

ளார். என்னே இவர் தம்புன்மதி யிருந்தவாறு! ஸபாஷ் மிகக் கெட்டிக் காரர்!! பிறரிடம் தப்பிதமே யிருந்தபோதிலும் இயேசுக் கிறிஸ்து நாதரின் உபதேசம் என்ன? "நீ உன்னைப்போல் பிறனையும் நேசி; உன் சகோதரனுக்கு எழுதரமல்ல எழெழுபது தரம் அவன் தப்பிதத்தை மன்னிப்பாயாக" என்று சொல்லுகிறார். தப்பித மிருந்தால்தான் இந்த ஒழுங்கு; கடுகளவேனுந் தப்பித மில்லாத இடத்தில் வீணே குற்றங் கண்டுபிடிக்க முயன்றும் ஒன்றும் அகப்படாது, எதையோ தாறுமாறாக வரைந்து எழுதுவது தானா புத்திசாலித்தனம்? இவர்தான் எழுதினா ரென்றால், "நல்லாயன்" பத்திரிகையின் ஆசிரியராகிய குருவானவர் எவ்வண்ணம் இப் பொய்க்கூற்றைப் பிரசுரிக்கத் துணிந்தனரோ? தெரியவில்லை. எளிய தன்மையில், ஏழைப் பெற்றோரிடம் பிறந்து பிரம்மாச்சாரியாகத் திரிந்தலைந்து, உலக ஆடம்பரத்தை வெறுத்து அன்பொன்றையே அணிகலமாகக் கொண்ட இயேசுநாதரின் சிஷ்யர்களெனச் சொல்லி, வெளிவந்த இவர் அப்பொய்க் கூற்றினைப் பிரசுரித்தது மிக்க விசனிக்கத்தக்கது. இவர் "நல்லாயனில்" அப்பொய்க் கூற்றைப் பிரசுரிக்கத் துணிந்தாலும், அப்பேர்ப்பட்ட கிறிஸ்துமத தூஷணை எங்கு, எந்தப் பக்கத்தில் இருக்கிறது என்பதைக் கவனித்தாரா? ஆசிரியரின் கடமையை இவர் நன்குணர்ந் திருப்பாரென்றே நம்ப இடமில்லை. உலகிற்குப் பயன்தரக்கூடிய வியாசங்கள் அணுவேனுமின்றி, பைபில் போதனையை மட்டுமேவரைந்து, புத்திசாலிகளான இந்து மதத்தினரை, அஞ்ஞானிகளென்றும், புரோட்டஸ்டாண்டு கிறிஸ்துவரைப் பதிதர் என்றும் அஞ்ஞான தத்துவமாகப் பேசும் ஆசிரியரைக் கொண்ட, "நல்ல ஆயன்" சஞ்சிகையால் எங்கட்கு யாதொரு பிரயோஜனமுமே யில்லை. எனவே நான் இதை ஒரு வருடத்திற்கு முன்பே பவிஷ்கரித்து விட்டேன். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே, இந்து மார்க்காபிமான புண்ணிய சீலர்களால், உண்டாக்கப்பட்ட பகவத்கீதை என்ன! திருக்குறள், உபநிஷத்துக்கள், மற்றும் யோகாம்சங்களைப் பற்றிய இதிகாசங்கள் என்ன! சொல்லவும், எழுதவும், வர்ணிக்கவும் முடியாத அரும்பெருந் துணை யென ஆன்மாவிற்கு வாய்க்கப்பெற்ற புராணங்களையும் பாராயணம் செய்து தத்வார்த்தப் பிரகாரம் நடக்கும் புண்ணிய சீலர்களையும் அஞ்ஞானிகளெனப் பிதற்றும் இக் குருவானவர் இவ்வியாசத்தை எற்றதற்கு இயேசு பகவான் என்ன தண்டனை விதிப்பாரோ தெரியாது. நிற்க, பர்னண்டஸ் "ஆனந்தபோதினியின்" எந்த சஞ்சிகையிலேனும் கிறிஸ்து மதத்தைத் தூஷித்து எழுதி யிருக்கிறதாகக் காண்பிப்பாரா? இயேசு ரக்ஷகர் பிறந்தது பொய்க்கதை, அவர் உபதேசம் பொய், கிறிஸ்துவர்க்கு மோக்ஷமில்லை, பைபில் சுத்த அபத்தம்" என்பன போன்ற வாக்கியங்கள், சென்ற எழு வருடங்களின் சஞ்சிகையில் காணவே யில்லை. நானும், சென்ற வருடங்கள் பூராவும் சந்தாதாரனாகஇருந்து வருகிறேன். ஒவ்வொரு சஞ்சிகையும் கவனத்தோடு வாசித்து வரு

கிறேன். "தம்மத அபிமானக் கடமையால் பிறர்மதத்தில் பிரவேசியாதபடி சாக்கிரதையா யிருக்கும்படியான சொற்கள் சில சஞ்சிகைகளில் இருக்கின்றன. இது பொதுவாக எம்மதத்தினர்க்கும் சகஜமே. ஐரோப்பாவிலிருந்து மோக்ஷ வாசலின் திறவுகோலைக் கையிற்கொண்டு வருபவர்களெனப் பாவிக்கும் பாதிரிமார்களால் ஏற்படுத்தப்பட்ட பைபில் ஊமன் என்னப்பட்ட ஸ்திரீகளால் கெட்டுப்போன இந்து மடவார் எத்தனையோ பெயர் தம் குலத்துக் கீனமான பெயர் படைத்தனர். இன்னும் அருமையான கற்பின் மகளிர் பைபில் ஊமன்களின் பசப்பான வார்த்தைகட் குடன்பட்டு நிர்ப்பாக்கிய நிலைமைக்குள் ளாயினர். நானே எத்தனையோ காரியங்களை நிரூபிக்கக் கூடும். இன்னும் சிலர், தம் மேலதிகாரிகளாகிய ஐரோப்பிய மிஷனெரிகள் சன்மானம் கொடுப்பார்களென எண்ணி இந்துமத தூஷணையே ஆபரணமாகக் கொண்டு பிரதிகள் அச்சிட்டு வழங்குகிறார்கள். இஃதேன்? இயேசுக்கிறிஸ்து இப்பேர்ப்பட்ட குயுக்திகளெல்லாம் செய்தா பிற மதத்தினரை கிறிஸ்துவர்க ளாக்கும்படி சொன்னார். இல்லை; இல்லை. இப்படி இந்து மதத்தைத் துவேஷிப்பவர்களாவது, அம் மார்க்கத்திலுள்ள நன்மைகளை உணர்ந்தவர்களோ? பகவத் கீதையின் அருமை, மோக்ஷ நரக பலாபலன், இவைகளை நன்கு ஆராய்ந்தவர்களோ? இல்லை. சில தினங்கட்கு முன் தூத்துக்குடி ம-ா-ா-ஸ்ரீ மஸ்கறிஞஸ் அவர்களும், நெல்லூர் ரெவாண்ட் தேவதாஸ் அவர்களும் "ஆனந்தபோதினி" யில் கிறிஸ்துமத தூஷணையிருக்கிறது என எழுதியதற்கு நடுநிலைமை கொண்டு குன்றாப் புகழ் படைத்த ஆசிரியர் அவர்கள், தக்கபதில் எழுதி யுள்ளார். பிறர் மதத்தில் பிரவேசிப்பதை எச்சரித்து எழுதியதைப் பார்த்து நாம் இந்த மாதிரி ஆக்குரோஷங் கொண்டோ மாயின், இந்து மத தூஷணையே முக்கிய லக்ஷணமெனக் கருதி உழைக்கும் நண்பர்கட்கு எத்தகைய அபராதம் விதிப்பாரோ இயேசு? ஜாக்கிரதை! இவ்விதமாக எழுதிவிட்டால் எல்லாரும் நம்மைப் புகழ்வார்களென்று, அல்லது ஐரோப்பிய மிஷனெரிகள் ஏதாவது சன்மானம் செய்வார்களென்று இங்ஙனம் இவர் வரையத் துணிந்தனர்? நான் "நல்ல ஆயனை" வாசிக்கும்போது ஒரு நன்மையையுங் கண்டிலேன். "ஆனந்தபோதினி" யிலோ அபரிமிதமான பொருட் சுவையும், ஆத்மலாபமுடைய பல வியாசங்களும், கற்றறிந்த வித்வ சிரோமணிகளால் எழுதப்படுவதால், என் பாமர இருள் நீக்கி பாரபக்ஷமற்ற நடுநிலைமைப் புத்தியை யருளி, ஆன்ம பிரகாசத்தையு மடையச் செய்ததெனத் தைரியமாய்க் கூறுவேன். மதத் துவேஷத்தை யகற்றித் தேசத்தொண்டே பெரிதெனக் கொண்டு அந்தகாரமாகிய சாகரத்தில் ஞான ஒளி கொடுக்கும் அருளாதித்தன் போலிருக்கும் "ஆனந்த போதினியை" எம் நண்பர்களே! எங்குல கிறிஸ்துவ சகோதரர்களே! முழு மனதுடன் ஆதரித்து அதன் பால் குன்றா அன்பு பாராட்டி அதன் நீடிய வாழ்வுக்

கென நமது ஆண்டவரைப் பிரார்த்திக்கவேண்டும். "ஆனந்தபோதினி" யொன்றே பொருளின் லாபத்தைக் கருதாது, பிறர் நன்மையைக் கருதிப் பரோபகார சிந்தையையும், மேதக்க குணத்தையும் தம் வாழ்நாளின் ஜீவ கிரீடமெனத் தாங்கி வாழும் ஆசிரியரைக் கொண்டு சென்னையில் பிரசுரிக்கப்படுகிறது. நான் பாரம்பரையாக கிறிஸ்து மதத்தினைச் சார்ந்தவனே. என் உயிரினும் மேம்பாடெனக் கருதிக் கிறிஸ்து மார்க்கத்தைக் கொண்டவனென்ற போதிலும் பிறர் மதத் துவேஷியே யன்று. எனவே நியர்யந் தவறி நடக்கும் செய்கைகளைக் கவனித்தும் மௌனஞ் சாதியாது மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி இவ்வியாசம் எழுதலானேன். "ஆனந்தனும்" அதன் ஆசிரியரும் நீடு வாழி.

குன்னூர்,
25—8—21.

பீ. தாமஸ் பாலையா பிள்ளை.

## இல்லறம்—மறுபிறப்பு.

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

அக்காலத்தில் மூளைக்கு இரத்த சம்பந்தமு மிருக்கின்றது. இல்லையென்பது சொல்லத்தக்கதல்ல. நித்திரை காலத்தில் பேசுதல், சிந்தித்தலாதி விரோதமான தொழில்கள் இன்மையால் சுவாசம் தடைபடாது வெளியில் வருகின்றது. அப்போது இருதயம் மலரவும் குவியவும் யாதொரு தடையுமில்லை. புறவஸ்துக்களும் நாடிகளுடன் சம்பந்திக்கின்றன. இயற்கையிற் பிரகாசமுள்ள மூளையும் தடையின்றிப் பிரகாசிக்கின்றது. இருதயம் மலர்ந்தும் குவிந்தும் வருகின்றது. இரத்தமும் தடைபடாம லோடுகின்றது. இங்ஙனமாகவும் சரீரமறிவின்றி யிருக்குமாயின் சரீரத்துக்கே யறிவில்லையென்று கொள்ளப்படுவ தன்றி வேறெவ்வாறு கொள்ளத்தகும். உதயகாலமுதல் இந்திரியங்களுடன் கூடி வேலைசெய்துவந்த ஆன்மாவென்னும் ஒருபொருள் நித்திரை காலத்தில் இந்திரியங்களுடன் சம்பந்தப்படாம லிருப்பதே அக்காலம் அறியுந் தன்மைக்குக் காரணமாமென்க. அவ்வான்மா கட்புலனுக்குப் புலப்படாத ஓர் அரும்பொருளா யிருத்தல் வேண்டும். அணுவென்று கூறப்படுவது எக்காலத்து மழிவற்றபொருளாம். அது ஒரு உடலைவிட்டுத் தனித்திராது. ஆயினும் மலினப்பட்ட வுடலைவிட்டு மற்றோருடலை யடையாநிற்கும்.

இனி தேசகால பாத்திராகாரங்களால் சரீரம் வேறுபடும்; அதனால் மறுபிறப் புண்டென்பது பொருத்த மின்றென்பர் ஒருசாரார். அதன் கருத்து யாதெனின், மேற்றிசையிற் பிறந்தோர் வெண்ணிறமும், வடதிசையிற் பிறந்தோர் சற்றுச் சிவந்தநிறமும், தென்னாட்டிற் பிறந்தோர் கருநிறமுமுடையவர்களா யிருக்கிறார்கள். தென்னாட்டிற் பிறந்தோர் அதிக உயரமும் குட்டையு மில்லாதவர்களாயும், அரபி துருக்கித் தேசங்களிற் பிறந்தவர்கள் உயரமானவர்களாயும், லாப்லாண்ட் தேசத்தவர்கள்

மிகக் குட்டையாயு மிருக்கிறார்கள். இது இடத்திலாய வேறுபாடு. மாரிகாலம் பனிக்காலங்களில் இரத்தங்குறைந்து வேகம் குன்றியும் சோம்பல் மிகுந்து மிருக்கின்றன; பின்பனிக் காலத்திலும் உஷ்ணகாலத்திலும் தேகத்திற்கு ஊக்கம் மிகுகின்றது. அதிக வெப்பகாலத்தில் சரீரத்தில் ஓய்வு காணப்படுகின்றது. இது காலத்தாலான வேறுபாடு. பெரும்பான்மையில், கருநிறமுள்ள தாய்தந்தையர்க்குக் கருநிறமுள்ள குழந்தையும், வெண்ணிறமுள்ளவர்களுக்கு வெண்ணிறமான குழந்தையும் பிறக்கின்றன. ரோக சம்பந்தமுள்ளவர்கள் அதேரோகமுள்ள புத்திரர்களையும் பெறுகிறார்கள். இது பாத்திரபேதம். மாமிசம் புசிப்பவர்களுக்குப் பிறக்கும் சிசுக்கள் பலமான சரீரமுள்ளனவாகவும், மற்றவர்க்குப் பிறப்பது பலவீன முள்ளதாகவு மிருக்கிறதைப் பிரத்தியட்சத்தில் காண்கிறோம். இது ஆகாரபேதம். ஆதலால் கால தேசபாத்திர ஆகார பேதங்களாலேயே வேறுபாடுகளுண்டாமென்பது.

கன்மத்தின் வேறுபாட்டால் பலவகைச் சிருஷ்டிகளுண்டாமென்று கூறும் ஆஸ்திகர்கள் நிறமுதலியவற்றையே காரணமாகக் கொள்ள வில்லை. ஒருவன் பிறக்கும்போதே குருடனாகவும், ஒருவன் முடவனாகவும், ஒருவன் சிறந்த புத்திமானாகவும், ஒருவன் மந்தனாகவும், பிறக்கிறான். ஒருவன் கற்பிக்கப்படாமலே யுணர்ந்து கொள்கிறான். ஒருவன் எவ்வாற்றானு முணர்வதில்லை. ஒருவன் செல்வத்திற் பிறந்து சிறந்திருக்கிறான். மற்றொருவன் தரித்திர குடும்பத்திற் பிறந்து செல்வத்தை யடைந்து சுகிக்கிறான். ஒருவன் அரசனாயிருக்கிறான். ஒருவன் ஏவலாளாயிருக்கிறான். இவையெல்லாமவனவன் புத்திக்கேற்றவாறு அமைகின்றன வென்று கூறமுடியாது. ஏனெனில், படித்த ஒருவன் எடுத்த முயற்சியிற் சித்தியடையாமல் சோர்வடைகிறான். படியாத ஒருவன் எடுத்த முயற்சி தடையின்றிக் கைகூடப் பெற்றுச் சிறப்படைகிறான். இதனால் புத்திக் குறைவினாலும் புத்திமிகுதியினாலுமே வாழ்வுந்தாழ்வு முண்டாகு மென்பது உசிதமல்ல. நொண்டியான் பெண் நொண்டியான பிள்ளையையே பெறவேண்டு மென்றும், குருடானபெண் குருடான பிள்ளையைப் பெறவேண்டும் என்றும் வரம்பு உலகத்திலில்லை. இலக்கணக் குறைவற்று அங்கப்பழுதின்றிச் சிறந்திருக்கும் பெண் குருடும் செவிடும் முடமுமான புத்திரர்களைப் பெறுவதும், இலக்கணக் குறையான பெண் அழகிற் சிறந்து அவயவப் பழுதற்ற புத்திரர்களைப் பெறுவதும் பிரத்தியட்சமல்லவா?

இது வாத பித்தங்களின் மாறுபாட்டால் கருப்பையிலுண்டாம் விகாரப்பாடென்று கூறலாமெனினும், அது ஏகதேசமேயன்றி நிச்சயமானதல்ல. கருப்பை என்பது கருமானது குகைபோல்வதல்ல. அப்படி யிருக்குமாயின் அதிற்பதிந்த கருவும் அவ்வுருவம் பெறுதலமையும். அங்ஙனமின்மையால் இவ்வேறுபாடுக ளெல்லாம் மறுபிறப் புண்டென்பதைக் குறிப்

பிக்கும் சூசனமாகவே கொள்ளப்படும். கருப்பத்தில் புசித்த ஆகாரத்தின் வேறுபாட்டால் மந்தனான புத்திரன் பிறப்பானென்ப துண்டெனினும் அதுவே பிரமாணமாவதில்லை. ஏனெனில், நல்லாகார முள்ளவர்களுக்கு மந்தனான புத்திரன் பிறப்பதும், கெட்ட ஆகாரமுள்ளவர்களுக்குப் புத்திமானான புத்திரன் பிறப்பதும் பிரத்தியட்சமாதலால் அதுவு முசிதமன்று. இதனால் காலதேச பாத்திர ஆகாரவேறுபாடே உயர்வுந் தாழ்வுமான பிறப்புக்குக் காரணமாவதில்லை யென்க. இவையெல்லாங் காரணமாவது கன்மத்தை யனுசரித்தேயாம்.

மறுபிறப் புண்டென்ப துண்மையாயின் முற்பிறப்பிற் கண்டு கேட்டனுபவித்தவைகளி லொன்றாவது இப்பிறப்பில் நினைவிற்கு வருவதில்லை. மறுபிறப் புண்டென்பதைப் பிரத்தியட்சத்தி லறிந்துவந்து கூறினவரொருவருமில்லை. உலகத்திற் பிறந்து அறிவு தோன்றிய நாள்முதல் நடந்தவைகளெல்லாம் ஒன்றன்பி னொன்றாக நினைத்துப் பார்த்தால் அவையறிவில் தோற்றுகின்றன. முற்பிறப்பில் நெடுங்கால மனுபவித்தவைகளில் ஒன்றேனு மிப்பிறப்பில் ஞாபகத்துக்கு வாராமலிருப்பது ஏனோ? அப்பிறப்பிற்கு மிப்பிறப்பிற்கு மிடையில் நெடுங்காலஞ் சென்றதனாலெனின் அது ஒவ்வத்தகாத காரணமாம்; ஆதலால், மறுபிறப்புண் டென்பது கொள்ளத் தகாததா மென்பர் ஒரு சாரார்.

இவ்வாறு இவர்கள் கூறுவது பெருந்தவறு. ஏனெனின், நாம் உலகத்திற் பிறந்து அனுபவித்த ஒவ்வொரு விஷயமும் தவறாமல் நினைவிற்குத் தோன்றுவதில்லை. காலையில் அனுபவித்தது மாலையில் மறக்கப்படுகின்றது. தனக்குத்தற்காலம் அவசியம் வேண்டிய ஒரு பொருளை எடுத்துவர உட் சென்றவன் அப்பொருளை யுடனே மறந்து நெடுநேரம் சிந்தித்து உணராமலிருக்கிறான். ஊருக்குப் பிரயாணமாயிருக்கிற ஒருவன், அவசியமான ஒரு விஷயத்தைத் தனது அன்புள்ள மனைவியிடங் கூறச்சென்று, அப்போழுதே யதனை மறந்து அஃது இன்னவிஷயமென்று புலப்படாமல் மயங்கிச் செல்கிறான். சில நாட்களுக்குமுன் நடந்த ஒருவிஷயம் ஞாபகத்துக்கு வருவதேயில்லை. பிறர்கூற வுணர்ந்து கொள்கிறான். பலதரங்கூறியும் உணராமலேயிருக்கிறான். இளமையிற் பெருமுயற்சியுடன் பயின்ற புத்தகங்களும் சிறிது காலத்தில் மறக்கப் படுகின்றன. இளமையிற் பயின்றவை முதுமையில் மறக்கப்படுகின்றன. இளமைப் பருவத்தில் நாமின்னது செய்தோமென்று கூட ஞாபகத்திற்கு வருவதில்லை. நாமிளமையா யிருந்தோ மென்பதேயுணரப்படுவதில்லை. தாய் தகப்பன் முதலிய பெரியோர் கூறக்கேட்டுத் தெரிந்து கொள்கிறோம். இதனால் முற்பிறப்பே யன்றி யிப்பிறப்பில் நடந்தவை கூட நினைவிற்கு வருவதில்லை. அக்காலத்தில் நாமிருந்தோ மென்பதற்கும் நாம்செய்த அருஞ்செயல்களுக்கும் பெரியோருரையும் அநுமானமுமே பிரமாணமாவதன்றி வேறில்லை. இதனைப்போல முற்பிறப்பிலும் மறந்திருக்கக் கூடுமல்லவா?

இனி யிளமையில் இந்திரியங்கள் முதிர்ச்சிபெறுமையால் அக்காலத்தி யவை மறக்கப்பட்டன. இந்திரியங்கள் முதிர்ந்த காலத்தில் நடந்தவை மறக்கத் தக்கனவல்ல வாகையால் ஞாபகத்தி லிருக்கவேண்டும்; இல்லாதிருக்க காரணம் யாதெனின், அது கூறுதும். முற்பிறப்பில் இந்திரியங்கள் முதிர்ச்சி பெற்றிருப்பினும், அப்பிறப்பு மாறி மறுபிறப்பு வருமளவும் அவ்விந்திரியங்களில்லாமையால் உணர்வது யாங்ஙனம்? மறுபிறப்பிற் புதியகருவிகளைப்பெற்று வருவதால் அக்கருவிகள் முதிர்ச்சி பெறுமளவும் அவ்விந்திரியங்களுக்குச் சக்தி குன்றியே யிருக்கும். அப்பொழுது முற்பிறப்பை யுணர்ந்துகொள்ளும் சக்தியிராது. அது முற்றும் மறக்கப்படும். இந்திரியங்கள் முதிர்ச்சிபெற்ற பின்னர் நடப்பவைகளையே யுணரும். முன்ஜன்மத்தை விடும்பொழுது இந்திரியங்களும் விடப்படுவதும், விட்டபின் மறுபிறப்பை யடையுமளவும் இந்திரிய சம்பந்த மற்றிருப்பதும், மறுபிறப்படைந்த பின் இந்திரிய முதிர்ச்சி பெறுமளவும் ஒன்றையு முணராம லிருப்பதுமே முற்பிறப்பையுணராமைக்குக் காரணங்களா மென்க. அங்ஙனமாயினும் முற்பிறப்பி லுணர்ந்த ஜீவான்மாவே யிப்பொழுது மிருத்தலால் அது ஏன் உணரக் கூடாதெனின், நெடுங்காலஞ் செல்லுமாயின் அறிவு குன்றுமென்பது அனுபவமாதலாலென்க. செயற்கை யெல்லாம் கெடுமாதலால் இந்திரிய சம்பந்தமான செயற்கையா லுண்டான செயற்கை யறிவு கால நீட்டிப்பினுல் குன்றுவது இயல்பே யாமென்க. (வரும்.)

சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(79-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு அம்பலவாணனுடைய முயற்சிக ளெல்லாம் வியர்த்தமாய் விட்டன.

அன்றிரவு அவன் சிறைச்சாலையில் சயனித்துக் கொண்டபோது அவன் மனம் பட்ட வேதனை கடவுளே யறிவார். 'நம் எதிரி மிக்க பலமுடையவன்; அவனைச்செயிக்க நம்மால் முடியாது. இனியென் செய்வது" என்று பெருந் திகிலடைந்தான்; இரவு முழுதும் அவன்பட்ட மனத்துன்பம் கடவுளுக்கே அற்பிதம்.

கடைசியில் காலை ஏழுமணிக்கு மிக்க வியாகூலத்தோடு தன் அறையில் உட்கார்ந்திருக்கும்போது சிறைச்சாலைக்காவலன் கதவைத்திறப்பதைக் கண்டு வியப்படைந்தான். ஏனெனில் அது அவன் கதவைத் திறக்கவேண்டிய காலமல்ல. கதவு திறக்கப்பட்டதும் காவலன் இன்னொரு மனிதனை யழைத்துவந்து விட்டுவிட்டுக் கதவை மூடிக்கொண்டு சென்றான்.

உள்ளேவந்த மனிதன் சற்று கடுத்தா உயரமுடையவன். நல்லதேகபலமுடையவன். சுமார் 50-வய துடையவன்போல் காணப்பட்டான். அங்கங்கு நரைத்த உரோமங்களை யுடைய தாடியும் சற்று தொங்கும் புருவங்க

ளையும் உடையவனு யிருந்தான். ஆனுல் அவன் கண்கள் கூர்மையான பிரகாசமுடையவைகளாய் எதிரிலுள்ளோர் இருதயத்தையே ஊடுருவிப் பார்ப்பவைகள்போல் தோன்றின.

அம்மனிதன் நமது நண்பனை நோக்கி "நீதானு அம்பலவாணன்?" என்றுன். அம்பலவாணன் திடுக்கிட்டுக் கலவரத்தோடு ஆம் என்றுன். அதன்பின் அம்மனிதன் தன் மேல் அங்கியை நீக்கி உட்சட்டையில் தொங்கும் பதக்கத்தை யவனுக்குக் காட்டினுன். அதில் "துப்பறியும் உத்தியோகஸ்தன் ஆனந்தலிங்" என்று குறிக்கப்பட் டிருந்தது.

துஷ்டர்களான இரங்கநாதன் சாமிநாதன் இருவரும் கொஞ்சக்காலத்திற்குமுன் மேலையூரில் ஆனந்தலிங்கைத் தலைமேலடித்து பூமியின் கீழ்ச் செல்லும் ஒருபாழும் சாலகத்தில் போட்டு விட்டதையறிந்த நமது நண்பர்களுக்கு இது மிக்க ஆச்சரியமும் நம்பக்கூடாததுமான சங்கதியாயிருக்கும்.

ஆனுல் மனிதனுடைய துஷ்டச் செய்கைகள் எப்போதுமே யவன் எண்ணப்படி நடக்கு மென்று நம்பலாகுமோ. இவ்வுலக முழுமையும் ஒரு ஈ, எறும்பு, சிறுபுழு, இவற்றின் நன்மை தீமைகளைக் கூடச் சதா கவனித்துக்கொண் டிருக்கும் ஒருவன் இருக்கிறுன். அவன் நிரபராதிகளுக்கு ஒருபோதும் துன்பம் நேரிட விடமாட்டான். அவனுடைய செயல்களின் உளவையறிய ஒருவராலும் முடியாது.

அந்த இரண்டு துஷ்டர்களும் ஆனந்தலிங்கின் தலைமேலடித்ததே அவன் ஸ்மரணையற்று விழுந்து விட்டான். அத்துஷ்டர்கள் அவன் பிராணன் இருக்கிறதா போய்விட்டதா வென்று சரியாய்க் கவனிக்கவில்லை. ஏனெனில் யாராவது வந்து விடுவார்களென்ற பயம் ஒருபக்கம், அதன்றி சாலகத்திலுள்ள சேறும் தண்ணீரும் மற்றவேலையை முடித்துவிடும் என்ற நம்பகம் ஒரு பக்கம், ஆதலால் அந்தச் சாலகத்தில் அவனைப்போட்டுவிட்டு உடனே ஓட்டம் பிடித்தார்கள்.

அவர்கள் அடித்த அடி யின்னும் கொஞ்சம் பலமாயிருந் திருக்குமேல் அவன் இறந்து போயேயிருப்பான்.

அவர்கள் அச்சாலகத்தில் அவனை யெறிந்துவிட்டதும் உடனே அதன் துவாரத்தை மூடிவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். அவன் வெளியில் உஷ்ணத்திலிருந்து உடனே அதிக குளிர்ச்சியான சாலகத் தண்ணீரில் விழுந்ததால், சீதோஷ்ணம் சேர்மாறுகவே சட்டென்று ஸ்மரணைவந்து விட்டது.

சாலகத்தின் ஆழம் நாலரையடியே யிருந்தது. இவன் அக்குள் ஆழமே யிருந்தது. ஆதலால் அதில் ஆழ்ந்து போகாமல் தலையைமேலே வைத்துக் கொண்டான். பிறகு சாலகத்தின் இருபக்கங்களிலும் காலை உறுதியாய் வைத்துக் கொண்டு நிதானித்துப் பார்த்தான். சாலகத்தின் மேல்துவாரம் தலைக்குமேல் சுமார் ஐந்தடி யுயரத்தி லிருக்கிறது.

ஏறலாமென்றால் இருபக்கங்களிலும் சறுக்கலா யிருக்கிறது; மேலுள்ள துவாரத்தின் மூடியிலுள்ள சிறு துவாரத்தின் வழியாக ஆகாயம்தெரிகிறது.

ஆனால் அந்த ஐந்தடி உயரத்தில் ஏற முடியவில்லை. மண்டையில் பட்ட அடி, இன்னும் மணியடிக்கும் ஓசைபோல் கேட்கத் தலைசுழற்ற லாகவே யிருந்தது. தன்னாலானவரையில் பார்த்தான், முடியவில்லை. தலை சுற்றல் அதிகமாய்விட்டது; வரவரத் தேகபலம் குன்றி மேலிருக்கும் துவாரத்தைப்பார்த்தபடி யிருந்தான். ஆச்சுது மறுபடி கீழுள்ள சாலகச்சேற்றில் விழும்சமயமாய் விட்டது.

அத்தகைய ஆபத்து வேளையில் ஆ கடவுள் காப்பாற்றுவார் என்ற ஒரு உற்சாக முண்டாயிற்று. அதாவது தலைக்குமேல் மனிதர் பேசும்சத் தங்கேட்டது. ஆனந்தவிங் உற்றுக்கேட்டான். மனிதர் அரவம் என்று தெரிகிறதேயன்றி இன்னது பேசுகிறார்க ளென்று முதலில் தெரியவில்லை. உற்றுக் கேட்டபோது தெரியவந்தது. (தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

---

## பொது விஷயங்கள்.

### இம்மாதத்தில் ஜீவிய சந்தாவில் சேர்ந்தவர்கள்.

1. ம-ா-ா-ஸ்ரீ K. தங்கவேலு முதலியார்,
துபாஸ், மிஸர்ஸ் அப்பாஸ் உசேன் கம்பெனி, சென்னை.

2. ம-ா-ா-ஸ்ரீ பெ. விஸ்வநாத முதலியார்,
ஜவுளி வியாபாரமும், கமிஷன் ஏஜெண்டும்,
2/68, திருப்பள்ளி தெருவு, சென்னை.

**தலைவாரிப் பின்னும் இயந்திரம்.**—அமெரிக்கா டாக்டர் ஜேமஸ் தாம் ஸன் என்பார் பெண்கள் தலைமயிரை வாரிப் பின்னக்கூடிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம்.

**அந்தமான் தீவு.**—தீவாந்தரசிட்சை இனிக் கூடாது என்று சட்ட நிரு பண சபையாரால் தீர்மானிக்கப் பட்டுவிட்டதால் அதை யநுசரித்து, அந்தமான் தீவிலிருந்து சில கைதிகளைச் சமீபத்தில் சென்னைக்குக் கொணர்ந்து உள்ளூர் சிறைச்சாலையில் வைத்திருக்கிறார்கள்.

**ஓர் அதிசயம்.**—கண் தெரியாத குருடர் காதினால் எழுத்தை வாசிக் கக் கூடிய ஆச்சரியத்துக்குரிய வோர் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட் டிருக் கிறதென்று "ஈஸ்டர்ன் மெயில்" பத்திரிகை எழுதுகிறது. இந்த இயந் திரம், "ஆடோபோன்" எனப்படுகிறது. இதன்மேல், எழுத்தை வைத்து விட்டால் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு பிரத்தியேகமான தொனி உண் டாக, அதன்மூலமாய் ஒரு அந்தகன் யாதோர் புத்தகத்தையாவது பத்திரி கையையாவது எளிதில் படிக்கக் கூடுமென்றும், ஒரு நிமிஷத்திற்கு 25 வார்த்தைகள் வாசிக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

# "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

## துன்மதி௵ ஐப்பசி௴—சாலிவாகனம் 1844—கலி 5023
## பசலி 1330-31—கொல்லம் 1096-97—ஹிஜிரி 1339-40
## இங்கிலீஷ் 1921௵ அக்டோபர்௴ நவம்பர்௴

| ஐப்பசி௴ | அக்டோபர்௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | ஞா | ○56-0 | ரேவ-54-0 | அமி54சித் | தனபால விரத ஆரம்பம் |
| 2 | 17 | திங் | பிர57-8 | அசு-56-33 | சித்-60 | குடிபுக, தானியம் வாங்க |
| 3 | 18 | செ | து57-5 | பர-58-15 | சித்-60 | மாடு கொள்ள |
| 4 | 19 | புத | திரி55-57 | கிரு-58-42 | அ58-42சி | சந்திரோதயமாசவிரதம் |
| 5 | 20 | வியா | சது53-50 | ரோ-57-4 | மர-60 | மரணயோகம் |
| 6 | 21 | வெ | பஞ்50-48 | மிரு-56-42 | சித்-60 | கரிநாள் |
| 7 | 22 | சனி | சஷ்46-52 | திரு- 54-28 | சித்-60 | யாத்திரைசெய்ய, கோடி |
| 8 | 23 | ஞா | சப்42-22 | புன-51-34 | சித்-60 | உபநயனம் செய்ய |
| 9 | 24 | திங் | அ37-12 | பூச-48-7 | சித்-60 | நாமகரணம், காதுகுத்த |
| 10 | 25 | செ | நவ31-38 | ஆயி-44-12 | சித்-60 | யாத்திரைக்காகாது |
| 11 | 26 | புத | தச26-20 | மக-40-0 | சித்40அமி | இராம ஏகாதசி |
| 12 | 27 | வியா | ஏக19-12 | பூர-35-37 | சி35-37ம | கோவஸ்த துவாதசி |
| 13 | 28 | வெ | துவ13-21 | உத்-31-26 | சி31-26அ | தனதிரயோதசி, பிரதோ |
| 14 | 29 | சனி | திர7-35 | அஸ்-27-32 | மர-60 | நாகசதுர்த்தசி, தீபாவலி |
| 15 | 30 | ஞா | சது2-15<br>●57-10 | சித்-24-16 | சித்-60 | அமாவா-கேதாரிவிரதம் |
| 16 | 31 | திங் | பிர45-17 | சுவா-22-0 | அமி22மர | |
| 17 | 1 | செ | து52-12 | விசா-20-37 | ம20-37சி | |
| 18 | 2 | புத | திரி51-32 | அனு-20-50 | சித்-60 | |
| 19 | 3 | வியா | சது52-5 | கேட்-22-31 | ம22-31சி | |
| 20 | 4 | வெ | பஞ்55-32 | மூல-25-55 | அ25-35பி | |
| 21 | 5 | சனி | சஷ்59-40 | பூரா-30-54 | சித்-60 | |
| 22 | 6 | ஞா | சப் 60-0 | உத்-37-13 | அமி60 | |
| 23 | 7 | திங் | சப் 5-7 | திரு-44-17 | அ44-17சி | |
| 24 | 8 | செ | அஷ்11-25 | அவி-51-46 | சி51-46ம | கோவாஷ்டமி |
| 25 | 9 | புத | நவ 17-40 | சதை-59-1 | சி 59-1அ | கிரேதாயுகாதி |
| 26 | 10 | வியா | தச 23-8 | பூரட்-60-0 | சித்-60 | மந்திரம் ஜெபிக்க |
| 27 | 11 | வெ | ஏகா28-17 | பூரட்-5-26 | சித்-60 | போதன ஏகாதசி |
| 28 | 12 | சனி | துவ31-40 | உத்-10-40 | சி10-40பி | யோகீஸ்வர துவாதசி |
| 29 | 13 | ஞா | திர33-33 | ரேவ-14-23 | அ14-23சி | வைகுந்த சதுர்த்தசி |
| 30 | 14 | திங் | சது33-45 | அசு-16-31 | சித்60 | யாத்திரை செய்ய |

(அக்டோபர்௴ நிரலில், 17 முதல்: 1921௵ நவம்பர்௴)

| | | | |
|---|---|---|---|
| சே | | | |
| | 10உ க-செ | | |
| | 24,, து-சு | | செ |
| | | கு-பு | ரா-க<br>ச-கு |